# திராவிடநாடு

1—10—61 | வார வெளியீடு | விலை 16 காசு



அறிவகம் நூல் நிலையம்
5, மந்தவெளி சந்து மயிலை,
சு: வெ: தங்கசாமி


## தடை எங்கே?

—[ கலையழகன் ]—

சீறிவரும் சிறுத்தைக்குத் தடையைப் போட
சிலந்திவலை முயலுவதோ? மேகம் மண்ணில்
தூறிவரும் வெள்ளத்தின் முன்னே நின்று
துரும்பொன்று தடுத்திடுமோ? கிழக்கு வானில்
ஏறிவரும் கதிரவனின் ஒளிமறைத்து
ஏற்றிடுமோ வெற்றியினைக் குடைகள் கூட்டம்?
கூறிவரும் "திராவிடத்தின் கொள்கை" வேகம்
குறைந்திடுமோ? மறைந்திடுமோ? தடையால் சொல்வீர்!

தித்திக்கும் திராவிடத்தின் மொழிகள் நான்கை
தீய்க்கவரும் எம்மொழியும் சாகும்! கொள்கை
எத்திக்கும் எதிரொலிக்கும்! இனியும் நாங்கள்
எடுபிடியாய் அடிமைகளாய் வாழோம்! வெற்றுச்
சொத்தல்ல சுகமல்லப் பெரிது! நாட்டின்
சுதந்திரமே எம்பேச்சு! கொள்கையே மூச்சு!
வித்தகரே! சொல்லிடுவீர்! தடைதான் எங்கே?
சூறையாட வரும்படையைக் காண்பீர்! இங்கே!

# முயற்சி திருவினையாக்கும்

ப. இளவழகன்

"'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.' வள்ளுவரின் தெள்ளுதமிழ்க் குறளகத்தில், அறிவுடைமை அதிகாரத்தின் மூன்றும் குறளிது. ஒன்றே முக்கால் அடியிலே உலகம் உய்வதற்கு நீதிகள் கூறும் வள்ளுவர், எந்த ஒரு பொருளைப்பற்றியாயினும், அதைக் கூறுபவர்கள் உயர்ந்த நிலையிலே உள்ளவரானாலும், தாழ்ந்தவரானாலும், வேறு யாரேயாயினும் அந்தச் சொல்லின் — கருத்தின் உண்மையான பொருள் என்னவென்று காண்பதே அறிவு என்று அழகாகச் சுட்டிக்காட்டுகிறார். 'எதையும் ஏன்? எதற்காக? எப்படி? எதனால்? என்று கேட்டுப் பகுத்தறிவிற்கேற்ற பதில், வினாவுக்கேற்ற விடை கிடைத்த பிறகே நம்பு; செய்!' என்ற கிரேக்கப் பெரியார் சாக்ரடீசின் கருத்தையும் தன்னகத்தே அடக்கிக்கொண்டிருக்கும் அருங்குறளிது! வள்ளுவர்தம் அறிவுக்கொத்தாம் திருக்குறளை நாம் கற்கவேண்டும்; கற்றபடி நிற்க வேண்டும். குறள் தந்த மறவர் சமுதாயத்தின் மருள் நீங்க, அறியாமை இருளகல, இழிநிலையைத் துடைத்து அடிமைத்தனத்தை ஒழிப்பதையே நமது கடமைகளில் தலையாய கடமையாகக் கொள்வோம்! குறள் வழி நிற்போம்! வெல்வோம்!!'' உரையை முடித்தார் அறிவானந்தர்; கூட்டம் கலைந்தது.

அறிவானந்தர்: அவர் ஓர் செல்வந்தர். பொருளுக்கு மட்டுமல்ல; அறிவுக்கும்! செருக்கற்ற செல்வந்தர்; குறளன்பர்; கொள்கை பரப்பாளர். நாள் தவறாமல் கிடைத்த நேரத்தில், இருக்கும் இடங்களில், அது, பொதுமேடையானாலும், திண்ணையானாலும் கூடியிருப்பவர்களின் மத்தியில், குறளை — தமிழ் இலக்கியங்களை — வரலாறுகளை நல்லவைகளென்று தனக்குப்படும் கருத்துக்களை எடுத்துக் கூறிக்கொண்டிருப்பார். அவர் பேச்சிலே பொருளிருக்கும்; மென்மையும் தண்மையும் தழுவி நிற்கும்; காயொத்த சொல்லினைக் காணமுடியாது. அவர் குறள் கற்றவரல்லவா! அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடம்; நீதிக்கும் நேர்மைக்கும் நண்பர். அநீதிக்கும் தீமைக்கும் பகைவர். அநீதிக்கும் தீமைக்கும் மட்டுமல்ல; அந்த ஊர்ப் பெரும் புள்ளி புன்னைவனம் பிள்ளைக்கும்கூட! இவருக்குப் புன்னைவனம் பகைவரல்ல; புன்னைவனத்திற்கு இவர் பகைவர்.

புன்னைவனம்: அந்த அழகூரில் இவர் பெயர் சொன்னால், அழும் குழந்தை வாயை மூடாது; அலறி அழத் தொடங்கும். இவரைக் கண்டால் ஆடாத உடம்பெல்லாம் ஆடும் — நடுக்கத்தால். அந்த ஊருக்கே இவர் இடுவதுதான் சட்டம்; கூறுவதுதான் திட்டம். வைதீகத்தின் காப்பாளர்; தெய்வ நெறித் திருச்சபைத் தலைவர்; தர்ம கர்த்தா, எல்லாமே இவர்தான்.

தாரத்தை இழந்துவிட்ட புன்னைவனத்திற்கு ஒரேயொரு தமையன்; தாயில்லாப் பிள்ளை. பரம்பரை பரம்பரையாக, அந்த ஊரை ஆளும் வர்க்கம்போல் இருந்துவந்த குடும்பம் அவருடையது. "இராசராச சோழனால், பதினெட்டுத் தலைமுறைக்கும் முன்னால் தன்னுடைய மூதாதைகளுக்குப் பரிசாகத் தரப்பட்டதே இந்த அழகூர்'' என்று அடிக்கடி சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்வதில், புன்னைவனத்திற்கிணை புன்னைவனமேதான். காலையில் வந்து பால் கறக்கும் பாலமுருகக் கோனாரிலிருந்து, மாலையில் மாடுகளை மேய்த்து வந்து கொட்டடியில் கட்டும் கோவிந்தன் வரையில், அதட்டல்—மிரட்டல், அவர் நிகழ்த்தாத நாளே கிடையாது.

தனக்கென்று உழைப்பவர்களை, தான் கொழுக்கப் பாடுபடுபவர்களைப் பதைக்கச் செய்வதில் சற்றும் சலியாத புன்னைவனம், பத்மநாபஐயரைக் கண்டுவிட்டாலே போதும். பாதத்தில் விழாத குறைதான்; பாக்கியெல்லாம் நடந்துவிடும். வரவேற்பென்ன! உபசரிப்பென்ன!! ஐயர், கொள்ளு என்று கூறி முடிப்பதற்குள், அவர் வந்த வண்டியின் குதிரைக்கே வைத்துவிட ஏற்பாடுண்டு. ஐயர் பரம்பரையென்றாலே அப்படி நடந்துகொள்வதில் புன்னைவனத்திற்கு ஒரு திருப்தி! ஐயரும், "பிராமணனுக்கு ஒரு வேளை சோறு போட்டால் ஒன்பது தலைமுறைக்குச் சுவர்க்கம்'' என்று கூறி வாழ்த்துவார். ஊரிலே மழையில்லையா? உடனே மாரியம்மன் திருவிழாவைத் தொடங்குவார்; ஊரே திரளும். ஆமாம்! அன்றைக்கு ஒரு நாளாவது மாரியம்மன் சார்பில் ஒரு உருண்டைச் சோறு கிடைக்குமே என்பதால், அடிதடியளவிற்கு ஊர் மக்கள் திரளுவார்கள்.

பெருத்த வெள்ளமா? "போடு கங்கையம்மனுக்கு பூசை'' என்று தொடங்கிவிடுவார்கள்; வேலை வெட்டியேது மற்றவர்கள், உண்டியைக் குலுக்கியபடி. அந்த அழகூரின் மக்களெல்லாருமே அறியாமைக் குட்டையில் புரண்டுகொண்டிருந்தார்கள். அவர்கள் அறிவுள்ள ஒரு சமுதாயமாக, மாறப் பெரு முயற்சி செய்தாக வேண்டும்.

அன்று மாலை வழக்கம்போல், தான் அமைத்திருந்த குறட் கூடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் அறிவானந்தர். அங்கே வழியில் சிறு கூட்டமொன்று கூடியிருந்தது. பத்மநாபர் எடுத்துச் சென்ற மூட்டையிலிருந்து வாழைப்பழமொன்றை எடுத்துவிட்டதாகவும்,

(4-ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் தலைதூக்குகிறது!

மலர் 20 | ஆண்டு சந்தா ரூ. 8 | (1—10—61) | தனிப்பிரதி 16 காசு | [ இதழ் 9

சில நாட்களுக்கு முன் டில்லியில் கூடிய முதல் அமைச்சர்கள் மாநாட்டில், தேவநாகரி எழுத்தை நாட்டின் பொது எழுத்தாக அமைக்கும் ஒரு விசித்திர யோசனை உருவானதல்லவா?

அந்த யோசனை விசித்திரமானது மட்டுமல்ல; விவேகமற்றது, தேவையற்றது, அதனுல் விளைவது கெடுதல் மட்டுமல்ல—குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட்டு, நாட்டில் ஒருளவுக்காவது இருக்கின்ற—இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கின்ற ஒற்றுமையும் இல்லாதொழியும் என்று மொழி நூல் வல்லுனர்களும், விபரமறிந்த பலரும் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தனர்.

நமது மாநிலக் கல்வி—நிதி அமைச்சரும் "அது நடக்கிற காரியமல்ல'' என்று அபயமளித்தார்.

நடவாத ஒன்றை, ஏன், நடக்கப்போவதாக எண்ணிக்கொண்டு வீணை, ஆர்ப்பாட்டங்களில் இறங்குகிறீர்கள் என்று வேறு முடிவறிந்த மூதறிஞர்போல் பெருமிதம் கலந்து பேசினர்.

நாமும் அமைச்சரின் உரைக்கு அட்டியிராது—அவர், நடக்காதென்பதை முன்கூட்டியே அறிந்துதான் இப்படி அடித்துப்பேசுகிருரோ என்றுகூட நாம் எண்ணினோம்

ஆனல், இப்போது பார்த்தால் நிலைமை, அமைச்சரின் ஆணித்தரமான அறிவுரைக்கு மாருக உருவெடுத்திருக்கிறது.

27—9—61-ல் டில்லியில் கூடிய "தேசிய ஒருமைப்பாடு கமிட்டி,'' மூன்றரைமணி நேரவிவாதத்திற்குப்பிறகு,

> "தேவநாகரியைப் பொது லிபியாக்குவதால் பிரதேச மொழிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்ற பயம் தேவையில்லை. ஏனெனில், இரு லிபிகளின் உபயோகத்திற்கும் வழி செய்யப்படும். அதாவது, பிரதேச லிபியும் தேவநாகரி லிபியும் உபயோகிக்கப்படும். இப்படிச் செய்வது தேசிய ஒருமைப்பாட்டிற்கு உகந்தது.''

என்று முடிவு செய்திருக்கிறது.

தேவநாகரி எழுத்தோடு அந்தந்தப் பகுதிகளில் வழக்கில் இருக்கும் எழுத்துக்களும் நடைமுறையில் இருக்குமாம். எனவே, தேவநாகரி எழுத்து நாட்டின் பொது எழுத்தானுலும், அந்தந்தப் பகுதிகளில் ஏற்கெனவே இருந்து வரும் எழுத்துக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாதாம்.

தேவநாகரி எழுத்தைப் பொது எழுத்தாக்குவதால், மற்ற மற்ற மொழிகளுக்கு இடையூறு ஏற்படாதென்று கூறுவது கேலிக் கூத்தாகவே இருக்கிறது.

இந்தி இந்நாட்டின் பொது மொழியானல், மற்ற மொழிகள் அழிந்துவிடா—கெட்டுவிடா என்று, இந்தி வெறியர்களும், அவர்களின் அடிவருடிகளும் கூறினரல்லவா?

பிறகு, நிலைமை வேறு விதமாக மாறும் என்பதை அறிந்ததும்,

> "இந்தி பொது மொழியாகும் அருகதையைப் பெறும் வரையில் ஆங்கிலமே இந்நாட்டின் பொது மொழியாக இருக்கும்''

என்று கூறப்பட்டது. ஆனல், இந்தி மொழிக்கு அந்த அருகதை—பொது மொழியாகும் வாய்ப்பு ஒருபோதும் ஏற்படாது. என்று மொழி நூலறிந்த பலரும் கூறினர். அதன் பிறகு,

> "இந்தி நாட்டின் பொது மொழியானுலும், ஆங்கிலமே என்றென்றைக்கும் இந்நாட்டின் பொது மொழியாக இருக்கும்''

என்று கூறப்பட்டதல்லவா?

இதுபோலவேதான் இப்போது இந்தத் தேவநாகரி வெறியர்களும்,

> "தேவநாகரி லிபி, பொது லிபியானுலும், அந்தந்தப் பிரதேச லிபிகளும் கூடவே இருக்கும். எனவே மற்ற லிபிகள் தேவநாகரி லிபியால் கெட்டுவிடாது''

என்று கூற முன் வந்துள்ளனர்.

இந்தி மொழியைப் புகுத்தினுல், மற்ற மொழிகள் எங்ஙனம் வளர்ச்சியடையாவோ, அதுபோலவே தேவநாகரி எழுத்தாலும் மற்ற மொழிகள் கெடும் என்று கூறத் தனி அறிவு தேவையில்லை. சாதாரணமாக அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு தெளிவான உண்மையாகும்.

தேவநாகரி எழுத்தைப் பொது எழுத்தாக்கும் முயற்சி மீண்டும் தலை தூக்குகிறது என்பதை நமது மாநிலக் கல்வி அமைச்சரும் அறிந்திருப்பார் என்றே நம்புகிறோம்.

ஒரு வேளை இதுவும் அதுபோலத்தான் என்று எண்ணி வாளா இருக்கிருரோ என்னவோ!

முதலமைச்சர்கள் மாநாட்டு யோசனை போன்றதுதான் இதுவும்; எனவே இதனைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று அவர் கருதியிருந்தால் நல்லதுதான்.

என்றபோதிலும் முளையிலேயே கிள்ளி எறியப் படவேண்டிய நச்சுப் பூண்டைப்போல், இந்த வேண்டப்படாத — தேவையற்ற முயற்சியையும் முறியடிக்க, நாட்டின்—மொழியின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் ஊக்கம் காட்டும் நல்லவர்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்காக ஐயர் அந்தப் பையனைப் பிடித்து விளாசிக்கொண்டிருப்பதாக, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களில் ஒருவன் விவரித்தான். கூட்டத்தினரை விலக்கிக்கொண்டு நுழைந்தார் அறிவானந்தார். அங்கே இன்னும் நான்காண்டுகளும் முடிவு பெறாத பையன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான். ஐயர் "என்னத்துக்குடா இந்தத் திருட்டுபுத்தி?பறைப்பயலே" என்று இவ்வாறு ஏதேதோ கூறித் திட்டிக்கொண்டிருந்தார்.

"ஐயா, பையன் செய்தது தவறான செயல்தான். ஆனால், அதற்காகத் தாங்கள் நடந்துகொள்ளும் முறை சரியானதல்ல. தாங்கள் தாழ்வாகக் கருதும் பறைச்சாதிக்கும் உங்களுக்குமுள்ள வேற்றுமை என்ன? அங்கங்களிலே மாறுதலுண்டா? குறையுண்டா? பறையர்களெனப்படுவோருக்கும், பள்ளருக்கும் பச்சை நிற இரத்தமா ஓடுகிறது உடலில்? 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றார் பாரதி, 'ஒன்றே குல'மென்றார் திருமூலர். ஆனால், தாங்கள் இன்னும் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் ஏற்றத்தாழ்வு பாராட்டுவது வருந்தத்தக்கது;" அறிவானந்தர் கூறி முடிப்பதற்குள் அடிபட்ட நாகம்போலானார் பத்மநாபர்.

"சாதியில்லையா? இந்தச் சண்டாளப் பேச்சை என்னிடத்திலேயே பேச ஆரம்பிச்சுட்டீரோ? தாழ்வு இல்லையென்றால், உயர்வு ஏது? உயர்வு இல்லையென்றால் தாழ்வேது? பகவான் சும்மாவா படைச்சார்? பாத்துத்தானே அவனவனை அததுக்குப் படைச்சார்! ஊரையெல்லாம் கெடுப்பது போராதுன்னுட்டு, இந்தப் பத்மநாப ஐயருக்கே புத்திசொல்ல வந்துட்டீரோ? இருக்கட்டும்; இருக்கட்டும்!" என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டார்.

சீப்புப்படாத சிக்குப்பிடித்தமுடி; கண்களிலே ஊளை; மூக்கிலே வெளிக்கும் உள்ளுக்குமாக தாவிக்கொண்டிருந்த சளி; பாதித் தொடையை மறைத்துக்கொண்டிருந்த அரைக்கால்சட்டை; கையிலே தின்றதுபோக எஞ்சியிருந்த பழம், இவ்வகையாகக் காட்சி தந்துகொண்டிருந்த அந்தப்பையன், அழுதபடி இன்னும் அங்கேதான் நின்றுகொண்டிருந்தான். அறிவானந்தர் அவனைத் தூக்கிக்கொண்டு குறட் கூடத்திற்கு விரைந்தார்.

*

நாட்கள் பல கடந்தன.

"அறிவானந்தரே! ஊர் மக்களை எனக்கெதிராகத் தூண்டிவருகிறீராம். குறிப்பிட்ட நேரத்திற்குமேல் எந்த வேலையானாலும், எந்த இடமானாலும் செய்யக்கூடாது என்கிறீராம். உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்க வற்புறுத்துகிறீராம். அது இல்லை, இது இல்லை; அதுபொய், இது மெய் என்று ஏதேதோகூறுகிறீராம். இதெல்லாம் எனக்குப் பிடிக்காது; நம்மைப்போன்ற பெரிய மனிதர்களுக்குத்தகாதபாதை! ஏதோமன்றமாம்; மருத்துவமனையாம்; அனாதை இல்லமாம்! இதெல்லாம் நாம்செய்துதானா நடக்கும்? கோயிலிருக்கு; குளமிருக்கு; சர்க்காரிருக்கு! அதையெல்லாம் மறந்துவிட்டு நீர் ஏன் இவைகளில் தலையிடவேண்டும்? எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன்; நீர் பொருட்படுத்தியதாகக் கூடத் தெரியவில்லை" ஆத்திரமும், ஆணவமும் போட்டியிட்டுத் தெறித்தன புன்னைவனம் பேச்சில்.

"எத்தனையோ முறை தாங்கள் கூறியும் மாறாத நான், இப்போது மட்டும் மாறிவிடவா போகிறேன்! எனக்கு எது நல்வழி—நாட்டுக்குத் தேவையான வழி என்று புலப்படுகிறதோ, அதைச்செய்கிறேன்; இனியும் செய்வேன்! அதேபோன்று தாங்களும் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்; வரவேற்கிறேன்!" அமைதியோடு, ஆனால், அழுத்தத்தோடு கூறினார் அறிவானந்தர்.

"வீணாகக் கெட்டுவிடாதீர்—எச்சரிக்கிறேன்!"

"எச்சரிக்கை! சமுதாயச் சில்லரைகளால் சாக்கடையில் நெளியும் புழுவினும் கீழாக மதிக்கப்பட்டு, சமுதாயத்தின் அடித்தளத்தில் உழன்று கொண்டிருப்பவர்கள், ஒன்றுகூடித் தங்களுக்கு எச்சரிக்கைவிடக்கூடிய நிலையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன் நான். தாங்கள் எனக்குக் கூறுகிறீர் 'எச்சரிக்கை' என்று. விந்தைமட்டுமல்ல இது; வேடிக்கையும் கூட!"

"வேடிக்கை வினையாகிவிடப் போகிறது அறிவானந்தரே! என் இனத்தவர் என்பதாலேயே இவ்வளவும் கூறினேன். கேட்டால் கேளும்; கேளாவிட்டால் கெட்டுத் தொலையும்."

*

மாதங்கள் சில கழிந்தன.

'இருளின் இடையில் ஒளிவிளக்' கைப்போன்று நின்றுகொண்டிருந்தார் அறிவானந்தர். ஊர்ப்பெரியவர்கள் எனப்படுவோர் கூட்டப்பட்டிருந்தனர். அத்துணைபேரும் 'ஆமாம் சாமிகள்' புன்னைவனத்திற்கு. இல்லையென்றால் அவர் முன்னால் எவரும் தலையெடுக்கமுடியாதே!

"ஊரின் அமைதிக்கு, தெய்வ நெறிக்கு, பெரியவர்கள் வகுத்து விட்டுச்சென்ற வழிமுறைகளுக்கு ஊறு விளைவிப்பதாக அறிவானந்தர் மீது குற்றங்களைக் கூறினர் புன்னைவனம்; ஒத்துப் பாடினர் உடனிருந்தோர்! அவர்களாகவே ஒரு முடிவையும் எடுத்துக்கூறினர்கள்; "ஊரைவிட்டு விலகியிருக்கவேண்டும்; ஊரின் எல்லைக்கப்பால் சென்றுவிடவேண்டும்" என்று. சிரித்தார்; சித்தார்த்தனையொத்த அறிவானந்தர் வாதிட்டுப் பலனில்லையென்று புறப்பட்டார். பழமரம் எங்கேயிருந்தாலென்ன?

ஊரின் ஒதுக்குப்புறமான இடமொன்றில், ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தார், நூல் நிலையமொன்றை நிறுவினர், சமுதாய மறுமலர்ச்சிக்கு, அரசியல் விழிப்பிற்கு, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிமுறைகளை உண்டாக்கினர். பணியாற்ற வேண்டிய வகைகளை—திட்டங்களைத் தீட்டினர் அறிவு நூல்களை—மாண்டுகொண்டிருக்கும் ஆண்ட இனத்தின் பழஞ் புகழ்ச் சிறப்புகளை — ஆராய்ச்சிகளை எழுதினர்.

*

ஆண்டுகள் சில கழிந்தன.

மக்கள், காலம் கழியக்கழியப் புன்னைவனம் பிள்ளையின் அக்ரமச் செயல்களை, சுயஉருவை, அறிவானந்தர் கூறுபவைகளில் அடங்கியிருக்கும் ஆழ்ந்த உண்மைகளை உணரத் தலைப்பட்டனர். சிலர் அறிவானந்தர் கொள்கைகளை ஏற்றுப் பரப்பவும் தொடங்கினர். முன்பெல்லாம் பத்மநாப ஐருக்கு ஒரு நாளைக்கு நான்கு திருமணங்களுக்கு அழைப்பிருக்கும். குறைந்தது இரண்டு கருமாதிச் சடங்கிற்காவது செல்வார். ஆனால், வரவர அவர் வருமானம் வற்றத் தொடங்கியது; வாரத்திற்கு ஒன்று வருவதற்கே தகராறாகிவிட்டது. வைதிகமே குமுறியது அறிவானந்தர்மீது!

சனாதனவாதிகளை — சாத்திர சம்பிரதாயங்களைச் சாடும் முன்னேற்றப்

(14-ம் பக்கம் பார்க்க)

# நாடு ஏன் உருவானது

பெஸ்கி, எம். ஏ.,

அரசியல் வரலாற்றில், நாடு ஏன் என்பது அரசாங்கத்தை உள்ளடக்கியதாக கருதப்படுகிறது. நாட்டின் தேவையை, கட்டளையைச் செயல்படுத்துகின்ற ஒரு பிரிவே அரசாங்கம். எனவே 'நாடு' என்ற சொல் அரசியலில் அரசாங்கத்தையும் குறிக்கும் சொல்லாக கணக்கிடப்படுகிறது. நாடு அல்லது அரசாங்கம் எதற்காக உண்டாக்கப்பட்டது என்பதை பார்ப்போம். நாடு இல்லாவிட்டால் மக்கள் வாழமுடியாதா? நாடு தோன்றுவதற்கு முன், மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? நாடு தோன்றியபின் எங்ஙனம் வாழ்க்கை நடத்தினுர்கள்? மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு, குறிப்பாக எத்தகைய வாழ்க்கை நடத்துவதற்கு நாடு தோன்றியது என்பதைத்தெளிவுறப்பார்ப்போம். இதற்கான விடையை, பல அரசியல் அறிஞர்கள் அளித்திருக்கிருர்கள். அரசியலின் தந்தை என்றும் "எல்லாம் அறிந்தவர்களின் தலேவன்" என்றும் அழைக்கப்பட்ட கிரேக்க ஞானி அரிஸ்டாட்டில் இதற்கான விடையைப்பற்றிக் கூறுகின்றகாலே, மக்கள் நல்ல வாழ்க்கை அல்லது செம்மையான (best life) வாழ்க்கை நடாத்துவதற்கு நாடு தோன்றியது என்று பகர்கிருர். ஒழுக்க வரையறை இன்றிக் கட்டுப்பாடில்லாமல் சுயேச்சையாகத்திரிந்த மக்கட் கூட்டத்தை ஒரு வரையறைக்குள் உட்படுத்திக் கட்டுப்பாட்டையும் அதன் மூலம் மனித வளர்ச்சிக்கும் வழி வகுக்கத் தோன்றியதுதான் நாடும் அரசாங்கமும் என்று கூறுகிருர். மக்கள் நல்ல வாழ்க்கை வாழவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கவேண்டுமேயன்றி, நாட்டின் பரப்பளவை விஸ்தரிக்க வேண்டும், மக்கட் தொகையைப் பெருக்கவேண்டும்,செல்வத்தைப்பெருக்கவேண்டும் என்பதாக இருக்கக்கூடாது என்று கூறி அரிஸ்டாட்டிலின் கருத்தை ஆதரிக்கிருர் நியூமன் என்ற அரசியல் பேராசிரியர். நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனேயும் நல்ல குழந்தையாக, வீரம் பொருந்திய வாலிபனுக, நேர்மையும் நாணயமும் கொண்ட நாட்டு மகனுக, சிறந்த குணங்கள் கொண்ட வீட்டுத் தலேவனுக, நல்ல தந்தையாக, விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்ற வித்தகனுக, தத்துவத்தில் சிறந்த மேதையாக மாற்றவேண்டிய பொறுப்பு நாட்டைச் சேர்ந்தது என்று குறிப்பிடுகிருர் அரிஸ்டாட்டில். நல்ல வாழ்க்கை அல்லது செம்மையான வாழ்க்கை என்ருல் என்ன என்று சிலர் கேள்வி எழுப்பலாம். அதற்கும் அரிஸ்ட்டாட்டில் பதில் தருகிருர். எல்லா மக்களின் நன்மைக்காக—அவர்களுடைய நல்வாழ்க்கைக்காக ஒவ்வொரு தனி மனிதனும் பகுத்தறிவோடு செயலாற்றுவதே நல்ல வாழ்க்கை என்று கூறுகிருர். லாக் இதற்கு மாறுபட்ட ஒருகருத்தைக்கூறுகிருர். தனி மனிதனின் உயிரையும், உரிமையையும் சொத்தையும் பாதுகாப்பதற்காக நாடு உருவானது என்கிருர். நாடு தோன்றுவதற்கு முன் அந்த நாட்டில் ஒரு நிலேயான அரசாங்கம் ஏற்படவில்லே; சட்டமன்றம் இல்லே; சட்டங்கள் இல்லே; சட்டங்களேச் செயல்படுத்தச் சரியான அமைப்பு இல்லே. மனித சமுதாயத்திடையே ஏற்படும் பூசல்களேயும், பிணக்குகளேயும் குரோதங்களேயும், விரோதங்களேயும் சண்டைகளேயும் சச்சரவுகளேயும் தீர்த்துவைக்க நீதிமன்றம் இல்லே. எனவே தனி மனிதனின் உரிமைகளேயும், உயிரையும் சொத்தையும் காப்பாற்றுவதற்கு நாடு தோன்றியது. லாக் அரிஸ்டாடில் இவர்களது கருத்துக்களுக்கு மாறுபட்ட ஒரு கருத்தை, பொருளாதாரத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிற ஆடம் ஸ்மித் என்பவர் (1723-90) தனது "நாடுகளின் செல்வம்" (wealth of Nations) என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிருர். அவர், நாடு (அரசாங்கம்) ஏன் தோன்றியது என்பதற்கு, அது மூன்று முக்கிய கடமைகளே நிறைவேற்றுவதற்கு என்று கூறி, அந்த அரசின் மூன்று கடமைகளேயும் குறிப்பிடுகிருர். ஒரு நாட்டில் பலவித சமுதாய அமைப்புக்கள் இருக்கின்றன. ஒரு சமுதாய அமைப்பு மற்ருெரு சமுதாய அமைப்பை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துவதை நாடு தடுக்கவேண்டும். இரண்டாவது, சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனேயும் இன்ஞெரு தனிமனிதனின் அநியாயமான செய்கைகளினின்றும் கடுமையான எதிர்ப்பிலிருந்தும் 'நாடு' காப்பாற்ற வேண்டும். அப்படிக் காப்பாற்றுவதின்மூலம் ஒழுங்கையும் நீதியை

யும் நேர்மையையும் நிலைநாட்ட வேண்டும். மூன்ருவதாகக் காட்டிலுள்ள எல்லா மக்களின் நன்மையைக் கருதி அவர்கள் பயன் பெறுவதற்குஏற்பத் தேவையானபொதுக் காரியங்களில் (அதாவது பள்ளிக்கூடம், மருத்துவம்,) போன்ற பொதுத்துறைகளில் அரசாங்கம் ஈடுபாடு கொள்ளவேண்டும். நாட்டின் நோக்கம்பற்றிக் குறிப்பிடுகையில், ஹெர்பர்ட்ஸ்பென்சர் என்பவர் (1820—1903) நாடு என்பது இயற்கையினுல் தோற்றுவிக்கப்பட்ட ஒரு பள்ளி என்றும், அது ஒரு மனிதனின் உரிமையை மற்றெருரு மனிதன் பறித்துவிடாமலிருப்பதற்காக ஏற்பட்டது என்றும் கூறுகிருர்.

ஹெகல் என்ற அரசியல்வாதியின் வாதம் விசித்திரமானது. மனிதன் எப்பொழுதும் சுதந்திரமாக இருப்பதை விரும்புகிருன். சுதந்திரம் என்ருல் என்ன? தனது பகுத்தறிவிற்கு எது சரி என்று தென்படுகிறதோ அதையே அவன் செய்ய வேண்டும் என்று விரும்புகிருன். ஒவ்வொருவனும் தன்னுடைய பகுத்தறிவிற்கு ஏற்ப ஒரு முடிவிற்கு வரும்பொழுது, அதுஎல்லோருடைய பகுத்தறிவிற்கும் ஏற்றது என்று கூறமுடியாது. ஒவ்வொருவனுடைய முடிவான கருத்தும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்கும். காரணம், பகுத்தறிவை மட்டும் வைத்து ஒரு முடிவிற்கு யாரும் வர முடியாது. அவனுடைய சூழ்நிலை, மனவளம், அவனுடைய அனுபவம் முதலியவைகளின் அடிப்படையோடு பகுத்தறிவையும் உபயோகப்படுத்தி ஒரு முடிவுக்கு வருகிருன். எனவேதான், தனி நபர் கருத்து, மனிதனுக்கு மனிதன் மாறுபட்டு இருக்கிறது. ஒரேவிதமான சீரான கருத்து, எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் கருத்து ஒன்று உருவாகவேண்டும். அதுதான் நாடு என்கிருன் ஹெகல். 'நாடு' என்பதை ஒரு 'தனி மனிதனுக' உருவகப்படுத்துகிருன் ஹெகல். எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு பொதுவான கருத்தை 'நாடு' (அரசாங்கம்) தருகிறது. அந்தக் கருத்து, தனிமனிதனுடைய கருத்தைவிடச் சிறந்தது, மேலானது, ஒரு பிரச்சினையின் பேரில் ஒவ்வொரு மனிதனும் தனது சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தனது கருத்தை வெளிப்படுத்துகின்றபொழுது, முரண்பட்ட, ஒன்றுக்கொன்று வேறுபாடான பல கருத்துக்கள் மோதுகின்றன. இதன் காரணமாக எடுத்துக்கொண்ட பிரச்சினைக்குஎந்தக்கருத்துத்தேவையானது, என்பதில் குழப்பம் ஏற்படும். அதுமட்டுமல்ல, ஒருவர் கருத்தை மற்றவர் புறக்கணித்தால் வீண் விரோதமும், பகைமை உணர்ச்சியும் உண்டாகும். எனவே அரசாங்கம் (நாடு) சொல்லுகிற முடிவே மக்களைக் கட்டுப்படுத்தும். தனிமனிதர்கள் தங்கள் கருத்துக்கள் எவ்வளவுதான் நல்லவைகளாக இருந்தாலும், அவைகளைஒதுக்கித் தள்ளிவிட்டு அரசாங்கத்தின் முடிவிற்குத் தலைவணங்கவேண்டும் என்கிருர் ஹெகல். தனது சொந்த விருப்பு, வெறுப்புகளை, கொள்கைகளை விட்டுவிடவேண்டும் என்று குறிப்பிடுகிருர்.

முசோலினி, ஹிட்லர் இவர்களுடைய கருத்து, தனி மனிதனை விட நாடு (அரசாங்கம்) இடுகிற கட்டளைதான் சிறந்தது என்பதாகும். அப்படியானுல் அந்த நாட்டிற்காகத் தனி மனிதன் ஏன் உயிர்விடவேண்டும் என்ற கேள்வி தானுகவே எழுகிறது. முசோலினி, ஹிட்லர் இவர்களுடைய கருத்துப்படி தனி மனிதன் நாட்டுக்காக உழைப்பதின் மூலம் யாருக்குப் பயன் கிடைக்கிறது? எதற்காக அவன் பாடுபட வேண்டும்? எதற்காக அவன் ஒரு நாட்டினுடைய கட்டளைக்குப் பயந்து செயல்படவேண்டும்? என்ற கேள்விகள் இயற்கையாகவே எழுகின்றன.

ஒரு நாடு தோன்றுவது தனி மனிதனின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி,அதன்மூலம்சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காக என்பது வெள்ளிடைமலை. ஆனுல், தனி மனிதனின் வாழ்க்கையை வளப்படுத்த நாடு தோன்றவில்லை. நாட்டின் வளர்ச்சிக்காகத் தனி மனிதன் தன்னுடைய உழைப்பைச் செயல்படுத்த வேண்டும் என்று ஹெகல் வழியில் ஹிட்லர் முசோலினி போன்றவர்கள் கூறும்பொழுது, அதில் 'ஏதோ ஒரு சுயநலம்' அடங்கியிருப்பது தெளிவாகிறது. நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திச் சர்வாதிகாரிகளாகி விளங்கியவர்களே தங்களுடைய சுயநலத்திற்காக ஹெகலின் தத்துவத்தைத்தலைமேல்தூக்கி வைத்துக்கொண்டார்கள்; அந்தக் கொள்கையின்படிதான் 'ஹிட்லர் வாழ்க' 'முசோலினி வாழ்க' என்று மக்கள் முழக்கமிட்டார்கள்.ஜெர்மன் நாடு வாழவேண்டும் இத்தாலி நாடு வாழவேண்டும் என்பதற்கு நாட்டின் சர்வாதிகாரிகளாக விளங்கிய தனி நபர்களைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

ஹெகலின் கூற்றுப்பிரகாரம் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனும் தனது உடல், பொருள் உயிர் அத்தனையும் அரசாங்கத்தின் (நாடு) நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும். உண்மையான சுதந்திரம் என்பது அரசாங்க சட்டத்திற்குப் பணிந்து நடத்தல்தான் என்கிருர். அரசாங்கம் போடுகின்ற சட்டம் பெரும்பான்மையான மக்களுக்குத் தீமை செய்வதாக இருந்தாலும், அல்லது சிறு பான்மையினருக்குக் கெடுதி விளைவிப்பதாக இருந்தாலும், அல்லது ஒரு சிலரது சுகவாழ்விற்கு வசதிபடைத்ததாக இருந்தாலும்,அந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படிவது தனி மனிதன் கடமை என்கிருர். அரசாங்கத்திற்குப் பணிந்து நடப்பதுதான் உண்மையான சுதந்திரம் என்கிருர்.ஜெர்மனியின்சர்வாதிகாரியாக விளங்கி உலகையே நடுநடுங்க வைத்த ஹிட்லரின் நாசிசக் கொள்கையும், இத்தாலியின் எதேச்சாதிகாரியாக விளங்கிய முசோலியின் பாசிசக் கொள்கையும் ஹெகலின் தத்துவத்திலிருந்து பிறந்ததுதான். எனவேதான், முசோலினி "இத்தாலிய நாடு என்பது சர்வ வல்லமைபடைத்த ஒரு சக்தி. அதனுடைய சக்தி தனி மனிதனுக்கு இருக்கும் சக்தியைவிடச் சமுதாயத்தின் சக்தியைவிட வன்மையானது. தனி மனிதன் அழிந்துபோகக்கூடியவன். ஆனுல், சமுதாயம் அழிந்து போகக்கூடியதல்ல. ஒரு மனிதன் இறந்துபோனுல், அவன் இடத்தை மற்றெருவன் நிரப்புகிருன். ஒவ்வொரு மனிதனும் பிறந்து வாழ்க்கை அனுபவித்து, பிறகு மடிந்துபோகிருன். ஆனுல், சமுதாயத்தின் பகுதி மாறவில்லை.சமுதாயத்தின் நோக்கம் தனி மனிதனை, நலனைக் கவனிப்பது அல்ல. தனி மனிதன் உயிருடன் உலவுவதே சமுதாயத்திற்காகத்தான். தனி மனிதனைச் சமுதாயம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தனி மனிதனும் சமுதாயத்திற்காக ஆனுல், நாடு வாழ்வதற்காக மனிதன் இல்லை. தனி மனிதர்கள் பல பேர் அடங்கிய சமுதாயத்தை உடையது நாடு. தனி மனிதன் வாழ்ந்தால்தான் சமுதாயம் வாழ முடியும். மனிதனுக்காகத்தான் நாடு இருக்கிறது என்ற உண்மை விளக்கத்தை அரசியல் அறிஞர் காண்ட் என்பவர் வெளியிட்டார். காண்டின் தத்துவம்தான் உண்மைக்கு ஆதர

வாக, உலகத்தின் அனுபவமாகவும் இருக்கிறது. நாடு எதற்காக உண்டாக்கப்பட்டது என்பதற்கு இன்றையதினம் கொடுக்கப்பட்டிருக்கிற விடை, காண்டின் அடிப்படை விளக்கத்தின்மேல் எழுந்தது தான் என்பதைப் பின்பு பார்ப்போம்.

இந்தக் கேள்விக்கு மற்றொரு விடையை ஜெரமி பெந்தம் (1748—1832) என்ற அரசியல் அறிஞரும் அறிந்திருக்கின்றனர்.

இவர்களுடைய தத்துவம் இது தான். உலகில் இருக்கிற ஒவ்வொரு மனிதனும், தான் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவேண்டும் என்ன விரும்புகிறான். மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது என்ன? அதற்கும் விளக்கம் சொல்கிறார்கள். மனிதனுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியும் துக்கமும், அதாவது இன்பமும் துன்பமும்அடிக்கடி ஏற்படுகின்றன. மனித சமுதாயமே இந்த இரண்டிற்கும் கட்டுப்பட்டது. மனிதனுடைய செயல்முறைகள் இந்த இரண்டு விளைவுகளையும்எதிர்பார்த்துச்செயல்படுகின்றன. இன்பம், துன்பம் ஆகிய இரண்டிற்கும் மனிதன் கட்டுப்பாட்டைத் தரவேண்டும் என்பது இயற்கையின் கட்டளை. துன்பத்தையும் இன்பத்தையும் உடல் மூலமும் அனுபவிக்கலாம், உள்ளத்தின் மூலமும் அனுபவிக்கலாம். அந்த இன்பமும் துன்பமும் சமுதாயத்திற்கு நல்ல சட்டங்களின்மூலம் கிடைக்கலாம்,அல்லதுபரம்பரைபரம்பரையாக அனுசரித்துவருகிற நல்ல கோட்பாடுகளின் மூலமும் கிடைக்கலாம். மனித சமுதாயத்தை ஆட்டிப் படைக்கின்ற இன்பத்தையும் துன்பத்தையும் கணக்கிட்டு, துன்பத்தை அதிக அளவு குறைத்து இன்பத்தை அதிகப்படுத்துவதே ஒரு அரசாங்கத்தின் கடமை என்கிறார் பெந்தம். யாருடைய மகிழ்ச்சியை அதிகப்படுத்தவேண்டும்? தனிமனிதனுடைய மகிழ்ச்சியையா அல்லது சமுதாயத்தின் மகிழ்ச்சியையா? என்பதற்கு பெந்தம் அளிக்கும் பதில். அரசாங்கம் (நாடு) தனி மனிதனின் இன்பத்தை, அதாவது மகிழ்ச்சியை அதிகப்படுத்தவேண்டும். அதேபோன்று சமுதாயத்தின் மகிழ்ச்சியையும் அதிகப்படுத்த வேண்டும் என்று இரண்டிற்கும் ஆதரவு காட்டுகிறார்.

ஒருவனுக்கு இன்பமாக இருக்கும் ஒருசெயல்,மற்றொருவனுக்குத்துன்பமாக இருக்கலாம். உதாரணமாக 'திருடக்கூடாது' திருடினால் தண்டனை விதிக்கப்படும் என்கிற சட்டம் நல்லவனுக்கு இன்பமாக இருக்கும். ஆனால், திருடனுக்கு அது தேள்வலி போன்று இருக்கும். தனி மனிதன் மகிழ்ச்சியை அரசாங்கம் அதிகப்படுத்த வேண்டும் என்று கூறுகிறாரே, அப்படியானால் திருடனின் மகிழ்ச்சியை அதிகப்படுத்த, திருடினால் தண்டனையில்லை என்று சட்டம் போடவேண்டுமா என்று சிலர் வினா எழுப்புவர். "திருடுவது ஒரு சிலருக்குத்தான் இன்பம் தருகிறது. பெரும்பான்மையான மக்களுக்குத் துன்பம் தருகிறது" ஆகவே இதற்குப்பதில் சொல்லுகையில் பெரும்பான்மையான மக்களுக்கு இன்பத்தை அதிகரிக்கக் கூடிய செயல்முறைகளில் ஈடுபடுவதற்கே அரசாங்கம் ஏற்பட்டது என்று பெந்தம் கூறுகிறார். "திருடுவது பெரும்பான்மையான மக்களுக்கு அதிக அளவு மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருந்தால், உறுதியாக அதுபோன்ற சட்டத்தை அரசு நிறைவேற்றலாம். பெரும்பான்மையான மக்கள் என்று கூறுகிறபொழுது நாட்டிலுள்ள மக்கட் தொகை முழுவதும் ஒவ்வொருவராகக் கணக்கெடுக்கப்பட வேண்டும். தனிமனிதன் ஒருவனாகவே கருதப்பட வேண்டும். தனி மனிதன் ஒருவன் செல்வந்தனாக இருக்கலாம். பட்டதாரியாக இருக்கலாம். அறிஞனாக இருக்கலாம். பல் கலையிலும் வல்லவனாக இருக்கலாம். அறிவுள்ளவன் ஆஸ்தியுள்ளவன் என்பதற்காகஒருவன், நான்குபேருக்குச் சமானம் என்ற நீதியில் அவனை நால்வராக எண்ணிக்கையில் சேர்க்கக்கூடாது. ஒவ்வொரு தனி மனிதனும் எண்ணிக்கையில் ஒருவராகவே கணக்கெடுக்கப்பட வேண்டும்.

நாடு எதற்காகத் தோன்றியது என்றகேள்விக்குப்பெந்தம்கொடுத்த மேற்கூறிய விடையும் பொருத்தமானதாக இல்லை. இந்தக் கோட்பாட்டைப் பலர் செயல்முறைக்குப் பொருந்தாது என்று ஒதுக்கித் தள்ளியிருக்கிறார்கள். காரணம், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் எது இன்பம் தருகிறது என்று ஆராய்ச்சி செய்து, நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரிடமாகச் சென்று கணக்கெடுத்துப்பார்ப்பது ஒருஅரசினரால் செயல்பட முடியாத காரியம். நேரமும், உழைப்பும் வீண்போகும். அரசியலில் கணக்கு உபயோகப்படாது என்பதே அரசியல் அறிஞர்கள் கண்ட முடிவு. எல்லா மனிதர்களுக்கும் இன்பதுன்பம் ஒரே நிலையில், ஒரே அடிப்படையில்தான் உருவாகும்என்றால்,இந்தக்கோட்பாட்டை ஒத்துக்கொள்ளலாம். ஆனால், ஒருவன் செய்கிற ஒரு நல்லசெயலே பெரும்பான்மையினருக்குத் துன்பமாகவும், ஒருசிலருக்குஇன்பமாகவும் இருக்கலாம். இன்பதுன்பம் என்பது தனிப்பட்ட மனிதனின் சூழ்நிலை, மனநிலை செயல்முறை, செயலின் தன்மை முதலியவற்றைப் பொறுத்தது. ஆகவே, பெரும்பான்மையான மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்த வழிவகுத்துக் கொடுத்தால், அதனால் வரும் மகிழ்ச்சியும் இன்பமும் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் என்று நாம் சொல்ல முடியாது. 'எண்ணிக்கை' என்ற சொல்லையே அரசியலில் உபயோகிக்கக்கூடாது. ஏனென்றால்,பெந்தமின்இந்தக்கோட்பாட்டில் அடிக்கடி உபயோகிக்கப்பட்டிருக்கிற இந்தச் சொல் தெளிவாகக் கருத்தை வெளிப்படுத்தவில்லை என்று அரசியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

அப்படியானால் நாடு (அரசாங்கம்) எதற்காகத்தோன்றியதுஎன்ற வினாவிற்குச்சரியான விடைதான்என்ன? அதை இப்பொழுது பார்ப்போம்.

இதற்குச் சரியான விடையை "அரசியலின் இலக்கணம்" என்ற புத்தகத்தில் பேராசிரியர் லாங்கி தந்திருக்கிறார். சமுதாயத்திற்கு ஏற்படுகிற நன்மையை ஒவ்வொரு மனிதனும் உணரச்செய்ய ஏற்பட்ட ஒரு அமைப்புத்தான் நாடு (அரசாங்கம்) என்கிறார் லாங்கி. ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்கு ஏற்படுகின்ற சமுதாய நன்மையை எப்படி உணரமுடியும்? ஒவ்வொரு மனிதனும் தன்னிடமுள்ள நல்லதை உணர்ந்து, அது ஒரு பெரிய சமுதாயத்திற்குப் பெருமளவு நன்மை செய்யப் பயன்படுத்த வேண்டும். அதாவது, ஒவ்வொரு மனிதனுக்கும் சில உரிமைகளை அரசாங்கம் (நாடு) அளிக்கிறது. அரசாங்கம் தோன்றுவதற்குமுன்பே மனிதனுக்கு உரிமைகள் சொந்தமாக இருக்கலாம். ஆனால், ஒரு அரசாங்கம் (நாடு) ஏற்பட்ட பிறகுதான் மனிதனுக்குள்ள அந்த உரிமைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அந்த உரிமையை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல், அந்த உரிமையை அவன் உபயோ

(12-ம் பக்கம் பார்க்க)

# "பைத்தியம்!"

"டுமீல்" என்று, வெடித்தது!

"ஐயோ! அத்தான்!" என்றலறிக்கொண்டே, அடிபட்ட உருவம் அங்கே சாய்ந்தது! பாறையைப் பிளப்பதற்கு வெடிவைத்த பாட்டாளி, "ஆ! கண்ணே!" எனத் துடித்து ஓடி, மனைவியின் அருகில் சென்று, அவள் நிலையைக்கண்ட அவன்,

"ஐயோ! இயற்கையே! என்ன செய்வேன்? கண்ணே! கண்ணே! கொடுமை இழைத்துவிட்டேன்! கொஞ்சிப்பேசும் உன்னை மண்மீது சாய்த்துவிட்டேன்! கண் திறந்து என்னைப் பார்! குமுறி வதைபடும் உன் நாயகனைப் பார்! கண்ணே பார்! உனக்குக் காலனாக இருந்த காதகன் இதோ, கதறி அழுகின்றேன்! 'காப்பவர்'தான் எவருமில்லை! உற்றருமில்லை; ஊருமில்லை; உன்னை இழந்து நான் உலகத்தில் வாழ்வேனா? ஒருதரம் கண் திறந்து என்னைப் பார்!

உருகும் உள்ளத்திற்கு ஒரு வார்த்தை கூறமாட்டாயா? சோகத் தொடர்கதைக்குத் துணையான நாயகியே! இனி நான் எப்படி வாழ்வேன்? என்னை மணந்து நீ கண்ட சுகம் இதுதானா? 'வண்ண நிலா, தேய்ந்து பின் வளரும் அத்தான்! நம் வாழ்வும் அப்படியே!' என்றாயே அன்றொரு நாள்! நம்வாழ்வில் ஏற்றமெங்கே? ஐயோ! பீறிட்டு ஓடிவரும் இரத்தம், உன் பிரிவை எந்தனுக்கு உணர்த்திற்று! மாற்றத்தை எதிர்நோக்கிக் காத்திருந்து, இயற்கைக்கு உன் உயிரைத்தந்துவிட்டாய்! கொடுமை! கொடுமை!......?"

என்று, தலையிலே அடித்துக் கொண்டு, கதறி அழுதான். கண்ணீர்த்துளிகள் அவள் முகத்தை நனைத்தன!

அந்திநேரத்தை அடைந்துவிட்ட அவள், கண்விழித்து, "அத்தான்" என்று, மெல்லிய குரலிலே, அழைத்துக்கொண்டே அழுதாள்.

"ஆ! என் அன்பே! பேசு! பேதை, என் நெஞ்சம் குளிரப்பேசு! கோதை உன் நிலைகண்டு கொந்தளிக்கும் கடலான, என் உள்ளம் அமைதி பெற, இனியதொரு வார்த்தை கூறு! பாசத்தோடு பதியைக்காத்த பைங்கிளியே! பேசு!... பேசு!...?"

அவனால், அதற்குமேல் பேச முடியவில்லை. வாய்பொத்தி அழுதான்.

"அழாதீர்கள் அத்தான்! பாழும் பாறைகளைப் பாரோர்போற்றும் உருவாக்கித்தந்திடும் உழைப்பாளர்க்கு, கலைவளர்த்த கன்னித் தமிழகம் தந்த பரிசு, அலங்கோல அழிவு

**சி. பெரியண்ணன்**

வாழ்க்கை! அதற்கு நாம் எடுத்துக் காட்டாய்ஆகிவிட்டோம்! அத்தான்! நாம் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப் பார்க்காதீர்கள்! எனக்கு நேர்ந்ததையும் நினைத்து வருந்தாதீர்கள். காதல் தந்திட்ட இன்னமுதாம் நம் செல்வனைக் கட்டிக் காத்திடுங்கள்! கடந்து செல்லும் உங்கள் அன்புக் காதலியின் கடைசி ஆசை இதுதான் அத்தான்! கலங்காதீர்கள்! உம்...! உங்களின் கனிவான முகத்தைப் பார்க்கும் பேறும், இதுதான் அத்தான் கடைசி! கலை வளர்த்த கலைஞன், கல்லுடைக்கும்நிலையடைந்து, காதலியை இழந்து தவிக்கும் கதை, இதுதான் அத்தான், முதல் கதை! நம்மோடு போகட்டும்! நம் கண்மணியை!... நம் கண்மணியை!... நான்!......?"

அவள் உயிர் பிரிந்தது! அவன் வடித்த கண்ணீர், பாறையின் குழி நிரம்பிச், சுனையாகிவிட்டது! பாரின் நீதிக்கு, அவன் இழைத்த தீங்கு என்ன?

'மலரும் வாழ்வு' என்று காத்திருந்தான்; மாறாக, அவன் வாழ்வு கருகிவிட்டது; வஞ்சியோ, துஞ்சிவிட்டாள்; பாரில், இனி என்ன இருக்கிறது, அவன் பரவசத்தோடு வாழ்வதற்கு! அழுதழுது சோர்ந்து விழுந்தாலும், ஆதரவு தந்து, ஆறுதல் அளிக்க, யார் வரப்போகிறார்கள்? உடன் இருந்தே குழிதோண்டும், உன்மத்தர் வதியும் நாட்டில் தானே, அவன் பிறந்திருக்கிறான்? வஞ்சம் வழிமறித்து, அவன் வாழ்வைக் கொள்ளையடிக்கும்போது, கொடுமைகளை ஏற்கத்தானே வேண்டும்?

சிதைந்த உள்ளத்தைத் தாங்கிக் கொண்டு, சிலையான அந்த அபாக்ய வதி, என்ன செய்வான்? மலையை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தான்! பாறைகள், எல்லாம் அவனைப் பார்த்துச், சிரிப்பதுபோல், அவன் மனச்சாட்சி எண்ணிற்று.

"எங்களைச் செதுக்கிக், கலைவடியும் உருவாக்கி வாழ்ந்திட்ட தொழிலாளியே! குன்றின்மீது, கொடுமைகள் பல ஏற்றுக் குமுறி வதைபட்டுப், பார்வைக்கு பாறைகளாக இருந்திட்ட எங்களை, உன் கண்ணுகக் கவனித்து, சிற்றுளியால் செதுக்கி, சீரான இடங்களிலே கொண்டுபோய்ச் சேர்த்தாய்! அப்போது, எங்களின் நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்ருய்! நாங்களும், கொஞ்சமும் வஞ்சமின்றி, உந்தன் கைஉளிக்குத் தஞ்சம் அடைந்திட்டோம்! கொடுமைக்காரா! நீ, அந்த நன்றியை மறந்துவிட்டாய்! வெடி வைத்து எங்களைப் பிளந்து, நீள்காம்பு சம்மட்டியால் நிலைகுலைத்து கப்பிக் கற்களாக்கிப், பாதைகளில் மிதிபட்டுப் பாழாய்ப் போக, ஆக்கிய செயலுக்கு,பாரடா! கைமேல் பலன் தந்துவிட்டோம்! பாவி! எங்களை உடைப்பதுபோல், உன் வாழ்வு உடைந்து போகட்டும்! உனக்கேனடா வாழ்வு? ஒழிந்து போ! ஒழிந்துபோ!"

அவன் மனச்சாட்சி, இப்படியும் கூறி, அவனை உன்மத்தனுக்கிவிட்டது. உரத்தகுரல்எழுப்பி,

"ஐயோ! கலை வளர்த்த தென்னகமே! உன்மகனின் கதியைப் பார்! பாறைகள் பரிகாசம் செய்யும் நிலையினை, நான் அடைந்துவிட்டேன்! வாழ்ந்த உன் மக்கள், வீழ்ச்சியுற்று, வதைபலப்பட்டுச் சீரழியும் உன் செல்வங்களைப் பார்! உன்னிடம் என்ன இல்லை? எங்களை ஏன் இப்படிச் சோதிக்கிருய்! வாழ்வதற்கு வழி தேடி அலைகின்ற, உன் அன்புக் குழவிகளின் ஆசைகளை நிராசையாக்கிவிட்டு, அனுதைகளாக்குவது அறமா? கன்னித் தமிழே! என் கண்ணின் கருமணியே போய்விட்டது! இனி ஏது, என் வாழ்வில் இன்பப் பார்வை? நானும் போகின்றேன்! என்னைப் பார்த்து எள்ளி நகையாடும், அந்தக் கல்லிடமே போகின்றேன்! அல்லல் அற்ற உலகிற்கு அழைத்துச் செல்லவேண்டுகின்றேன்! அருமைத் திருநாடே! அன்று வாழ்ந்த தென்னகமே! இப்படி, அவதிபல பட்டு உன்னைப் பிரிந்து போவோர் தொகைதான், இனிப் பெருகும்! அதன்பின், நீ வாழ்ந்து என்ன சாதித்துவிடப் போகிருய்?

மண்ணகமே மாதா! வானகமே தாயே! நீங்கள், நின்று நிலைபெற்று, வாழ நினைத்தால், வாழ்க்தவர் திருநாட்டின் அடிமை விலங்கொடித்து, அச்சமற்ற ஆனந்தத் தனி அரசை நிறுவுங்கள்! இல்லையென்ருல், நன்றியைக் கொன்ற வஞ்சகர் என்று, நாநிலம் உங்களைப் பார்த்து அஞ்சாமல் கூறும்! முதல் தோன்றி, உங்களுக்கு அழகு பெயர் சூட்டி, முத்தாரம் அணிவித்த மூத்தகுடி அழிந்தால், நீங்கள் மட்டும் வாழ்ந்துவிட முடியுமா? வாழ்வின் ஓரத்திற்குச் செல்லும் இப்பாவியின் கடைசி ஆசையை, நிறைவேற்றி வையுங்கள்! நான் சென்று வருகிறேன்!

வஞ்சகரின் நெஞ்சத்திற்கு, எடுத்துக்காட்டாய் விளங்கும் கல்லே! என்னை ஏற்றுக்கொள்! வாழ்விழந்த ஏழை அடைக்கலம் தேடி, இதோ வந்திருக்கிறேன்! துயரற்ற உலகிற்கு என்னையும் அனுப்பிவை! கல்லே! என்னை ஏற்றுக்கொள்! ஏற்றுக்கொள்!.........?"

கல்லின்மீது தலையை மோத வைத்தான்! குருதி கசிந்தது; அஞ்சாமல் கல்லின்மீது, தலையை மோத வைக்கும் அவன், "அம்மா" என்று, அழும் குரலைக்கேட்டு,

"அடா! என் செல்வமே!'அம்மா' இறந்த பின்பு, அப்பனும் கைவிட்டுச் சென்றுவிட்டால், வாழ்ந்தாலும் ஏசி, தாழ்ந்தாலும்எள்ளி நகையாடி, ஏன் என்று கேட்காத, இந்த வையகத்தில், எப்படிப் பிழைப்பதென்று' அழுகின்ருயா? நான் இருக்கும் வரை, உன்னை அனுதையாக்கமாட்டேண்டா! அழாதேயடா!"

என்று, உரைத்துக்கொண்டே,ஓடி, குடிசைக்குள், மண்ணிலே புரண்டு கொண்டு, பசி மிஞ்சக் கதறும்பச்சிளம் குழந்தையை வாரி எடுத்து, உச்சி மோந்து முத்தமிட்டான்! தாயின் மடியிலே புரண்டு, தனி இன்பம் காணவேண்டிய குழவி, தந்தையின் அணைப்பிலே, தவியாய்த் தவித்தது!

மஞ்சு சூழ் மலை ஓரம்; தனிமையாய் குடில் அமைத்து வாழ்ந்து வந்த அவனுக்கும், ஊருக்கும் இடையில், இரண்டு மைலுக்கு மேலிருக்கும். தேவையான பொருள்களை எல்லாம் அந்த ஊரிலிருந்துதான், அவன் வாங்கிவர வேண்டும். அப்படியிருக்க, கையிலே தங்காமல் கதறி அழுகின்ற பிஞ்சின் பசி தீர்க்க அவனுல் முடியுமா? "என்ன செய்வதெ"ன்று யோசித்தான்?

# அடுத்த இதழ்

"திராவிட நாடு" இதழுக்குக் கிடைக்க வேண்டிய **காகிதக் கோட்டா உரிய காலத்தில் கிடைக்காததால்,** அடுத்த இதழ் நிறுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டமைக்கு வாசகர்களும் விற்பனையாளர்களும் பொறுத்தருள வேண்டுகிருேம்.

காகிதம் கிடைத்ததும் மீண்டும் "திராவிட நாடு" இதழ் தொடர்ந்து வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

**பொறுப்பாளர்.**

அந்த நேரத்தில், "டிர்! த்தே!" என்ற குரல் கேட்டது. "பக்கத்திலே, யாரோ ஆடு மேய்க்கிருர்கள்? அவர்களிடம் சென்ருலாவது, ஆட்டின் பாலைத் தருவார்களே!" என்று எண்ணிக், குழந்தையைத் தூக்கிக் கொண்டு, குவளை ஒன்றையும் எடுத்துக்கொண்டு, ஒலி வந்த திசை நோக்கி நடந்தான்.

கையிலே கோல் பிடித்து, கம்பளியைத் தோளில் ஏந்தி, கஞ்சிக் கலயத்தைச் சுமந்தபடி நின்றிருந்த பையனிடம் சென்று, "ஐயா!" என்ருன்.

"ஏம்பா! என்னவேணும்" கள்ளங் கபடமற்ற நல்லவனும், அந்தப் பையன் கேட்டான்.

சற்றுத் தயக்கத்தோடு, "குழந்தைக்குப் பசி!" என்று கூறிவிட்டான்.

குறுக்கு மூளையும், குதர்க்கமும் இல்லா அந்தப் பையனுக்கு மனம் தாளவில்லை!

"என்னப்பா! பைத்தியகாரனை இருக்கிறே! இதுக்குபோய், என்னப்பா தயக்கம்! கொண்டாப்பா குவளையை! பச்சைக் குழந்தைக்குப் பால் கொடுக்க மறுக்கும், பாவியாக நான் பிறக்கிலேப்பா! உன்னைப் பார்த்தா, வாழ்க்கையிலே மிகவும் கஷ்டப்பட்டவரைப்போல், தெரியுது! என்னப்பா பண்றது! உலகத்திலே பிறந்துவிட்டோம்; இன்ப, துன்பம் எல்லாத்தையுந்தானப்பா பார்க்கணும்!"

பாலைக் கறந்துகொண்டே பேசிய பையன், கறந்த பாலை அவனிடம் கொடுத்தான். பாலை வாங்கிக் கொண்டு, வாய்கூடத் திறவாமல் வழி நடந்தான். பையனே, "ஐயோ பாவம்!" என்று, பெருமூச்சுவிட்டான்.

பாறை ஒன்றின்மேல் உட்கார்ந்து கொண்டு, பச்சைப்பாலையே உண்பித்தான். சோகக்கடலான அவன் உள்ளம், வேதனை அலைகளை மோத விட்டு, வேடிக்கை பார்த்தது. மடி மீது அயர்ந்து தூங்கும் மகனின் முகத்தை ஒருகணம், பார்த்த பார்வையை எடுக்காது பார்த்தான்.

"தூங்கும் செல்வனுக்குத் தூர வரும் பாரின் அநீதி, என்னென்ன படுமோசங்களை இழைக்குமோ? கொடுமைக்கு ஆளாகும், ஏழையர் கூட்டம், வாழ்வின் ஓரத்தை நாடி நடையிட்டால், நாநிலத்தில், 'கொடுமை' என்ற சொல் ஒழிந்து போய்விடுமா? ஏழைப் பாட்டாளியின் மகனைப் பிறந்துவிட்டால், வறுமையும், வாட்டமும்தான் அவன் வாழ்வை, வாட்டி வதைக்கும் என்ருல், வையத்து வளம் எல்லாம் நிலைகுலைந்து போகட்டும்! உண்டு கொழுக்க ஓரினம்; உண்பித்து உருக்குலைய ஓரினம்; இப்பிளவு நிலைத்து நிற்குமானல், அகிலம் அலையாடும் கடலாலே, அழிந்தொழிந்து போகட்டும்! அதுவாழ நினைத்திட்டால், அவதிப்படும் கோடானுகோடி, ஏழை உழைப்பாளர்களை மாய்ப்பதிலே முனையட்டும்! இப்படி ஒரு மாற்றம் அடைந்துவிட்டால்......?"

இப்படி எல்லாம் எண்ணிய அவன், மகனை வாரி எடுத்து, முகத்தோடு முகம் சேர்த்துக் கட்டிப்பிடித்தான். உறக்கம் கலைந்ததினுல் கண்விழித்த மகன், மீண்டும் அழுகையை மீட்டிவிட்டான்.

வானத்து வெண்ணிலவைக் காட்டி, "அன்பையும், பாசத்தையும் அள்ளி ஊட்டி, மழலைக்கு வித்தூன்றும், மாதா மாண்டுவிட்டாள்; தாய்ம்மையை இழந்த சேய், தவியாய்த் தவிக்குதிங்கே! தாயாக நீ வருவாய்! என் சஞ்சலத்தை தீர்த்திடுவாய்! என்று அந்த நிலவைக் கூப்பிடடா!" இப்படியும், இனி எத்தனையோ காட்டி, எடுத்துலவிப் பார்த்துவிட்டான்! அழுகைஓயவில்லை! குடிலுக்கு எடுத்து வந்து, குழந்தையை ஏணையிலே இட்டு, ஆட்டும் அவன், சோகத்தோடு பாட்டொன்று பாடினுன்.

மானம் பிறந்த மண்ணில்—மகனே!
நீயும் பிறந்தாயடா!
தானம் மிகுதமிழர்—இனம்
தந்திட்ட கேட்டினைப்பார்!

வண்ணப் புதுமலரே!—இங்கு
வாழ்ந்திட நீநினைத்தால்,
தின்னமாய் இன்னல்பகை—வந்து
தின்றிட எத்தனிக்கும்.

மாற்றரின் காலடியில்—தினம்
மண்டியிட்டுக்கிடக்கும்
கூற்றுவர் வாழவிடார்!—உயர்
செல்வரைத் தாழவிடார்!

'கஞ்சி' எனக்கதறும்—ஏழை
ஆவியை வாங்கும் அந்த,
வஞ்சகர் வாழ்நிலைக்கு—நாணி
அஞ்சி நீ கண்ணுறங்கு!

சீராரும் செந்தமிழே!—எந்தன்
செல்வத் திருக்குமரா!
ஆராரோ ஆரரிரோ—அன்பே
ஆராரோ ஆரரிரோ!

இசையினில் இலயித்து, இன்பமாய் தூங்கினுன் செல்வன்! இவனுடைய கண்கள் மட்டும், உறக்கத்தை மறந்துவிட்டன. உணவையும் ஒதுக்கிவிட்டான்; மழையினில் நனைந்த கோழி, குந்திடும் நிலையினைப்போல், மனைவியைப் பறிகொடுத்த அந்தப் பாட்டாளி குந்தியிருந்தான். உள்ளக்கடல் எத்தனையோ கோடி, எண்ண அலைகளை எழுப்பியவண்ணமிருந்தது. இரவு மணி, சுமார் மூன்று இருக்கும், கார்கருத்து மின்னிற்று; இடிமுழக்க ஒலிகேட்டுத்திடுக்கிட்டுப், பாலகனும் கண்விழித்து அழுதான், அன்புத்திரு மகனின் அழுகுரலைக்கேட்டு, எழுந்தோடி, ஏணையைப்பிடித்து ஆட்டினுன். அப்போதும் குழந்தை, அழுகையை நிறுத்தவில்லை! இடியோசைதான் எழுப்பிற்று; ஆனல், பசியும் துணையாய் நின்று, அவனை ஆட்டிப் படைத்தது.

துடிக்கும் செல்வனைத் தோளின் மீது போட்டுக்கொண்டே, அடுப்பிலே தீ மூட்டினுன். பழைய கந்தலிலே, முடிபோட்டு வைத்திருந்த கேழ்வரகு மாவைக் கொஞ்சம் எடுத்து, கஞ்சி காய்ச்சினுன். பசி மிஞ்சக் கதறும் பச்சிளம் பிஞ்சுக்கு ஊட்டினுன்! விடிவெள்ளி கீழ்த்திசை வானத்தில் முளைத்தது; சேவல்—'கொக்கரக்கோ!' என்ற குரல் எழுப்பிக் கூவிற்று; அவன் பழைய நினைவுகள் எல்லாம் நெஞ்சத்திலே நின்று, அவனைப்பிய்த்துத் தின்றன.

இப்படியே, பல நாட்கள் உருண்டோடிக்கொண்டிருந்தன; நலிந்து, மெலிந்து நடைப்பிணமாய் உலவும், அந்த உழைப்பாளி, 'இனி என்ன செய்வது?' என்று யோசித்தான். என்ன செய்வது? கையிலே இருக்கும் காதல் கனிமட்டும், இல்லாதிருந்தால், எப்போதுதோ, ஒரு முடிவை அடைந்திருப்பான்? மகனுக்காக இவன் வாழ்ந்துதானே தீரவேண்டும்? இன்பச் சத்தில்லா வாழ்க்கை வாழ்வதானுலும் உடலில் பலம் இருந்தால்தானே முடியும்? அதற்கு, பொருள்தேடி, உணவு உண்ண வேண்டாமா?

கல்லுடைத்துப் பொருள் தேட, அவன் மனம் ஒப்பவில்லை. மனைவியின் வாழ்வை முடித்த கல்லைக்

காணும்போதே, கண்கள் அருவியாகிவிடுகின்றன! அவன் எங்கே கல்லை உடைக்க முடியும்? இருந்தாலும், துணிந்து ஒரு முடிவுக்கு வந்தான்; வெடிவைத்துக் கிளப்பிய கற்களை மட்டும் உடைத்துவிட்டு, பின்பு, வேறு எந்த வேலையையாவது செய்து பிழைக்கத் திட்டமிட்டான்.

மகனோ, காலத்துப் பாதையிலே ஓடிவந்து, தவழும் பருவத்தை அடைந்துவிட்டான். துன்பத்தை ஒருகணம் மறந்து, சிறிது தூரத்தில் இருக்கும், அடுப்பூதும் மூங்கில் குழலைப் பிடிக்கத் தவழ்ந்தோடும் தன் மகனைக்கண்டு, அப்படியே பூரித்துப்போனான்! பருவத்திற்கேற்ப விளையாட்டுப் பொருள்களை அவனால், அளிக்கமுடியுமா? மாடியிலே பிறந்திருந்தால், பலவண்ணப் பொம்மைகளும், கண்ணையும், கருத்தையும், காதையும் கவரும் விசித்திரவிளையாட்டுப்பொருள்களும் அவன் எதிரே குவிந்திருக்காதா? அடுப்பூதும் குழலுக்கும் உதவாப் பொருள்களுக்கும் ஊர்ந்துசென்று, அலுத்துப்போன, உருக்கிவார்த்தெடுக்கா அந்தப் பொற்பதுமை உறக்கம்கொண்டுவிட்டது.

"தூங்கும் செல்வன் துயில் எழுந்தால், பசியால் துடிப்பானே!" என்று எண்ணி, அடுப்பிலே தீமூட்டி, கஞ்சிக்குச் சூடேற்றிவைத்துவிட்டு, கல்உடைக்க சென்றுவிட்டான் தந்தை!

பக்கத்திலே நின்றிருந்த கருவேல மரத்திலே, கூட்டினிலே சிட்டுக்குருவி சின்னதைக் கிடத்திவிட்டு, இரைதேட, சிறகடித்து பறந்துவிட்டது! தாய் வரவை எதிர்நோக்கிப் பார்த்திருந்த குஞ்சு, தாவித் தாவித் தவறிக் கீழே இருந்த குளத்தினிலே விழுந்துவிட்டது! இதைக் கண்ணுற்ற கல்லுடைக்கும் பாட்டாளி ஓடிப்போய் அதன் உயிரைக் காத்தான்.

குடிசையிலே, தூக்கத்தைத் துறந்து கண்விழித்த கண்மணியோ கண்களைப் பிசைந்துகொண்டே, அடுப்பண்டை தாவிச்சென்று, 'குழல்தான்' என்றெண்ணி, கொள்ளிக் கட்டையை இழுத்துவிட்டான்! மெள்ள இழுத்துக்கொண்டே, பாறைகளைப் பிளப்பதற்கு முறத்திலே, வைத்திருந்த வெடிமருந்து ஓரம் வந்தான்; கொள்ளி, வெடிமருந்திலே பட்டுவிட்டது! ஐயோ! கொடுமை! கொடுமை! 'திக்'கென்று தீப்பிடித்து அவன் முகத்தைத் தீய்த்துவிட்டது.

அலறி அழுத குழந்தையின் குரல் கேட்டு, அப்பன் ஓடிவந்தான், "ஐயோ! மகனே!" அவனைத் தாவி எடுக்கச் சென்றான். அன்புக் குழவியின் ஆவி பிரிந்தது. கெட்டலையும் பாட்டாளியின் வாழ்க்கையிலே, 'விட்டேனு பார்!' என்று கேடு விரட்டி அடித்தால், அதன் விளைவை எண்ணிப்பார்க்கத்தான் முடியுமோ?

அப்படியே, சிலையாக ஆகிவிட்டான்! சித்தம் பிறழ்ந்துவிட்டது; சிரித்தான் சீற்றத்தோடு; வாரி எடுத்தான் வரையாத சித்திரத்தை! வழி நடந்தான்! வழி நடந்தான்! எங்கோ தெரியாது?

வண்ண நிலா, வானத்து வீதியிலே வலம் வந்தது. இருந்தாலும், நடைபாதையோ, அவனுக்குத்தெரியவில்லை; அவன் கடந்துசென்ற, காடுகள் எத்தனையோ? மாறுத பாசத்தால், மாய்ந்துவிட்ட குழந்தையைத் தூக்கிக்கொண்டு, பாய்ந்தோடும் குரங்காய் மாறிவிட்டான்! புதைத்திடவோ, கொளுத்திடவோ அவன் சிதைந்த உள்ளம் ஏற்க மறுத்தது! பொன்னையும், மண்ணையும் அடித்தோடி வரும், பொன்னி ஆற்றங் கரையிலே நின்றுகொண்டு; போனவனை அணைத்து முத்தங்கள் பல ஈந்து, புலம்பி, வளர்ந்தோடும் வளர்நதிக்கு வாயாரப் புகழ் சூட்டி,

"வருகின்றான் என் மைந்தன்! சேயாக ஏற்றுக்கொள்! வாய் இல்லாப் பூச்சியை, சுழலில் சிக்க வைத்துச் சுழற்றி வதைக்காதே! பாயாக நீ இருந்து, துஞ்சும் என் செல்வனுக்குப் பண்பாட மறவாதே! பாட்டுக்கள் பலகேட்டு பண்பட்ட பாலன் இவன்! நான் சொன்னவைகளை நினைவில் வைத்துக்கொள்! கைவிட்டு விடாதே! நீயும் கைவிட்டால், நிலவுலகில் எங்கள் இனத்திற்கு ஆதரவு யார்? தென்னகத்து பொன்னியாறே! கன்னல் இளந் தமிழ் மகனைக் காத்திடு! இதோ!... ......' போய்விட்டான் என் மைந்தன்! பொல்லாத நிலவுலகே! அலையாடும் கடல் நோக்கி, போய்விட்டான் என் மைந்தன்! ஐயோ!...?" என்றுரைத்து, மண்மீது புரண்டு அழுதான்! சிதறிவிட்ட மனதைத் தாங்கிக்கொண்டு திரிந்தான்! திரிந்தான்! திரிந்துக்கொண்டே இருந்தான்!

அந்திசாயும் நேரம்; அந்நகரிலுள்ள நங்கையரும், நம்பியரும் உல்லாசப்பவனி வந்துகொண்டிருந்தனர்; அங்கோர் இடத்தில் நடைபாதையிலே, நலிந்து, மெலிந்து நினைவு தப்பிப்பிதற்றுகின்ற மனிதன் ஒருவன், அமர்ந்திருந்தான். உலக வாழ்க்கை மேடையிலே நடைபோட்டு, அவதிபலபட்டுச் சீர்குலைந்த அவன், தனக்கு என ஒரு தனி இராச்சியத்தை உள்ளத்திலே அமைத்துக்கொண்டு. ஆட்சி புரிந்தான்.

இடுப்பிலே கந்தல் உடை; பரட்டைத்தலை; கண்களிலே கண்ணீர்த் துளிகள்; கையிலே கரித்துண்டு; பார்ப்பவர்களுக்குப் பைத்தியமாய்க் காட்சிதந்தாலும். அவன் தீட்டும் ஓவியம், புகழ்ச்சிக்குரியதாய் இருந்தது. வண்ணக் குழம்பில்லை; வகைவகையாய்வரைவுக்கோல்கள் இல்லை; பளிங்கான சுவரில்லை; ஓவியக்கலையிலே பரிசுபெற்ற பட்டயங்கள் இல்லை.

கண்ட இடங்களிலே, கைத்திறத்தைக் கரித்துண்டால் காட்டிக், கனிவான காரிகை ஒருத்தியை, பச்சிளம் குழந்தை ஒன்று தாவவருவதுபோல் சித்திரம் தீட்டி,

"சிந்தைக்குகந்தவளே! சிங்காரப் பைங்கிளியே! மங்கா தலைளிவிளக்கே! எந்தனைத் தவிக்கவிட்டு ஏன் பறந்தாய் வேறு உலகம்; இந்தவேளையிலே நீவந்து வாய்திறந்து, 'ஏன் அத்தான் இந்நிலை? என் அத்தானின் இன்பமொழிகேட்டு எத்தனையோ

---

## வருந்துகிறோம்

தொடக்க காலம் முதல் சென்னையில், நமது இதழின் விற்பனையாளராக இருந்துவரும் தோழர் ஜி. என். சாமிஅவர்களின் தாயார் உருக்குமணி அம்மாள் சில காலம். நோய்வாய்ப்பட்டிருந்து, இயற்கையெய்திவிட்டார்கள் என்ற செய்திகேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

தாயாரை இழந்து துயருறும் சாமி அவர்களுக்கு நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

---

நாள் ஆயிற்று? முத்து உதிரும் வாய் திறந்து, இனியதொரு வார்த்தை பேசுங்கள் அத்தான்!" என்று நீகேட்கும் சத்தான மொழியை நான், இனி எப்போது கேட்கப்போகிறேன்? ஐயோ! கண்மணியே! ஏன் என்னை அனுதையாக்கிவிட்டாய்? என்னை வெறுப்பதற்கு உனக்கு என்ன பிழை இழைத்தேன் நான்! உன்னை நம்பித் தானே, உலகத்தில் வாழ்ந்திருந்தேன்! எனக்கு, ஆறுவிளைப்பதற்கு வட்டமிட்ட இயற்கை வந்து, உன் உயிரைக் கொத்திக்கொண்டு போய் விட்டது!

கொடுமை! கொடுமை! என்று இடிபோன்று கதறினேன்! 'இடும்பை ஏற்கத்தான் இவ்வுலகில் நீபிறந்தாய்! இழிமகனே! போடா! போ' என்று என்னை ஏளனப்படுத்த, எத்தனை நாள் காத்திருந்தாள், இயற்கை அன்னை! இல்லை! கண்ணே இல்லை! நீ சாகவில்லை! மாருத, பாசத்தால் மதிமயக்கம்கொண்டு திரியும் என்னைப் பார்த்து, 'மதிபிறழ்ந்த மனிதன் இவன்! இயற்கை விளைத்த சதியாலே, பைத்தியமாய்த் திரிகின்றுன்! ஐயோ! பாவம்!' என்று இவ்வுலகம் கூறும் அனுதாப மொழிகேட்டு, அனல்பட்ட மெழுகாக உள்ளம் உருகி அலைகின்றேன்! உள்ளத்தைத் திறந்து உன்னிடம்தான் பேசுகின்றேன்! வா....? வா....? என் அருகில் வா!......கண்ணேவா!.......? வரமாட்டாயா? வரமாட்டாய்! நீதான் செத்துவிட்டாயே!

அம்மாதான் செத்துப்போய்விட்டாள்! அட! என் செல்வமே! அவளை நினைத்து நீ ஏன் அழுகின்றுய்? உன்னை எடுத்தணைத்துப் பாலூட்டிச், சீராட்டி, உயர்ந்தவனுய் வளர்க்காமல் அவள் பறந்தாள்! உற்றதுணை உனக்கு, நானேதான்! ஆமாண்டா! வற்றுத வளங்கொழிக்கும் தென் தமிழ் பூமியிலே, இந்நிலைக்கு ஆளாக, சிற்பி செதுக்காச் சிலையாக நீவந்து ஏன் பிறந்தாய் என் வயிற்றில்?

அன்புத் திருமகனே! கன்னல் இளந்தமிழ் ஏறே! பாட்டொன்று பாடடா! பழைய மறவர் திறம் கேட்டு, பல நாட்கள் ஆயினவே! ஊட்டக்கருத்தில், உயர்பாட்டை எந்தனுக்கு, ஊட்டாது ஓடாதே! காட்டடா! கண்ணுடிக் கன்னத்தை! ஒருமுத்தம் தந்துவிட்டு, ஓடிப்போ உன் தாயிடம்........? (அழுது கொண்டே) நீயுந்தான் போய்விட்டாய்! நானும் ஏன் இருக்கின்றேன் நாநிலத்தில்? நீங்கள் இருவரும், ஒன்று சேர்ந்துவிட்டீர்கள்! இதோ, நானும் வந்துவிடுகிறேன்! இனி நாம் மூவரும்பிரியமாட்டோம்! பிரியமாட்டோம்.......? என்றுரைத்து அழுது கொண்டே, அச்சித்திரத்தின்மேல், புரண்டு அழுதான், 'யார் இந்தப் பைத்தியம்!' என்கிறீர்களா! ஆமாம்! கல்லுக்குக் காதலியைப் பலிதந்து, வெடிமருந்துக்குக்கண்மணியைப்பறி கொடுத்த அந்தப் பாட்டாளியே தான் இவன்!

இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற மக்கள், "பார்த்தியாப்பா! இது ஒரு புதுப் பைத்தியமப்பா! இது ஒரு வகையா இல்லே!" என்று கூறிக் கொண்டார்கள்.

'பைத்தியம்' என்று பெயர்ச்சூட்டி மகிழ்கின்ற உன்மத்தர்கள், வாழ்க்கையில் கேடுகளையே அனுபவித்துக், கெட்டலையும் பாட்டாளி ஏழை மக்கள், மதிகெட்டுப் பைத்தியமாய் அலைகின்ற உண்மைநிலையை எண்ணிப்பார்த்தது உண்டா! பைத்தியம் என்கின்றூர்! காரணத்தை அறிந்திடவோ, சிந்தனைத் தெளிவற்றுச் சிரிக்கின்றூர்! இது முறையா சொல்லுங்கள்?

★

---

7-ம் பக்கத் தொடர்ச்சி

கப்படுத்துகிறபொழுது, அது அவனுடைய சொந்த நலனுக்கும் சமுதாய நலனுக்கும் பயன்தரக்கூடிய வகையில் அரசாங்கம் சட்டதிட்டங்களின் உதவியுடன் வழிவகுக்கவேண்டும். சுருக்கமாகச் சொன்னுல், தனிமனிதன் ஒவ்வொருவனும் தன்னுடைய திறமையைச் சமுதாய நலனுக்கு பயன்படுத்தவேண்டும். அதற்கு அரசாங்கம் வழிவகுக்கவேண்டும். அந்த உரிமைகளை ஒரு தனி மனிதன் பயன்படுத்துகிற பொழுது, அதற்குத்தடையாகஇருப்பவைகளை நீக்கவேண்டியதும் நாட்டின் (அரசாங்கம்) பொறுப்பு. உதாரணமாக குடிமகன் ஒருவனுக்கு ஒரு தொழிலைச் செய்ய உரிமை இருக்கிறது. அவன் ஆலையில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய வேலைக்குத் தக்க ஊதியம்அளிக்கப் படவேண்டும். குறிப்பிட்ட கால வரம்பிற்குமேல் அவன் வேலை செய்யக்கூடாது. அவனுடைய நன்மைக்கும், வளர்ச்சிக்கும், அதன்மூலம் சமுதாயத்தின் நன்மைக்கும் தேவையான மேற்கண்ட கட்டுப்பாடுகளை விதிக்கும் பொறுப்பு நாட்டைச் (அரசாங்கம்) சேர்ந்தது. இதே போன்றுதான் ஒவ்வொரு மனிதனுக்கும் எழுத்துரிமை, சொத்துரிமை, பேச்சுரிமை, ஆகியவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைக் குடிமகன் ஒவ்வொருவனும் சமுதாயத்தின் நலன் பாதிக்காத வகையில் அனுபவிப்பதற்கு நாடு உதவவேண்டும். உதாரணமாகச் சொத்துரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. அதை அவன் அனுபவிப்பதற்கு உரிமை உண்டு. அதே சமயத்தில் உரிமை என்ற பெயரால் ஒரு கிராமத்தில் உள்ள எல்லாச் சொத்துக்களும் எனக்கே சொந்தம் என்று ஒருவன் சொல்வானேயானுல் நாடு (அரசாங்கம்) அவனைத் தண்டித்து அவனுக்குநியாயமான அளவுபோக, மீதியை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும். தேவையான அளவு, அதாவது நியாயமான அளவு சொத்து உள்ள ஒருவனை அவன் அந்தச் சொத்தை அனுபவிக்கவிடாமல் பலர் தொல்லை கொடுத்தால், அந்தத் தொல்லையைநீக்கவேண்டியதும் நாட்டின் (அரசாங்கம்) கடமைகளில் ஒன்று.

லாஸ்கியின் இந்த விளக்கம் அறிவுக்குப் பொருத்தமானதாகவும் தெளிவானதாகவும் இருக்கிறது. பெந்தம் கொடுத்த விடையின்அடிப்படைதான் லாஸ்கியின் விளக்கத்திலும் காணப்படுகிறது. துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிக்கவேண்டும். மக்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்ற கருத்துத்தான் இரண்டு விளக்கங்களிலும் காணப்படுகிறது. ஆனுல் பெந்தம்கொடுத்த விளக்கத்தில் தெளிவில்லை. சில சமயங்களில் குழப்பமுள்ளதாகவும் காணப்படுகிறது. ஆனுல் லாஸ்கியின் விளக்கம் தெளிவாகவும் சிறந்ததாகவும் இருக்கிற காரணத்தால் அது அரசியல் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

★

# 'ஹாமர்ஷீல்ட்'

—[அன்பு]—

இரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் என்றால் சிறிது படபடப்புடனும், சில வேலைகளில் கடுஞ்சொற்களையும் உதிர்ப்பாரே, அவரா என்று கூறிவிடலாம். பிரான்சின் தலைவர் டிகாலேயைத் தெரியுமா என்றால், அரசியல், பொதுவாழ்க்கையில் பெரும்பாலும் சிரிப்பதே கிடையாதே, அவர்தானே என்று கூறுவர். இப்படி சர்வதேசச் அரசியலில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும், இன்னும் கூறினால் அரசியல் உலகில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு பிரத்தியேகத் தன்மையைக் கூறலாம். ஆனால், இது போன்ற விசேஷத் தன்மைகள் ஏதுமில்லாது அடக்க உணர்வே இலக்கணமாய்க்கூச்சமான சுபாவமேபிரத்தியேகக் குணமாய் எட்டாண்டுகளாகச் சர்வதேசஅமைப்பான ஐ.நா.வின் முதல் ஊழியராய்ப்பணிபுரிந்து, எதிர்பாராத விதத்தில் இறந்தவர் ஹாமர்ஷீல்ட். "விளம்பரமற்ற அமைதி வழி அரசியல் தந்திரம்" இவர்கடைப்பிடித்துவந்தகொள்கை. பெரும்பாலும் இக்கொள்கையை அரசியலைத் தொழிலாக இல்லாமல் தொண்டாகக் கொள்பவரிடத்து மட்டுமே காணமுடியும். இவரது பதவியும் அலுவலும் தொண்டின் பாற்பட்டதேயன்றித், தொழிலின்பாற்பட்டதல்ல. "நான்" என்று பொருளும் தேவையுமில்லாமல் முன்வருபவர்களை அரசியல் உலகில் அடிக்கடி சந்திக்க நேரிடலாம். பின்னணியில் நின்று ஆக்கவேலைகளை விளம்பர உணர்ச்சி இல்லாமல் செய்து முடிப்பது புகழைத் தேடித்திரியாத மக்களிடத்து மட்டுமே காணமுடியும். கொரியப் பிரச்சினையைக் கவனித்து வந்தசாதாரணபொதுமக்கள்பலருக்கு, அதற்கு ஒரு நல்ல முடிவு காண்பதற்காக ஹாமர்ஷீல்ட் மேற்கொண்ட 'பயண'த்தைப்பற்றித்தெரியவந்திருக்காது. சூயஸ் பிரச்சினை—அப்போது தெருத் திண்ணைகள் முதல் ஐ. நா. வரை பிரதிபலித்தது. எகிப்தின் நாசரும் பிரிட்டனின் ஈடனும் மிகச் சாதாரணமாக எல்லோர் நாவிலும் புகுந்து வந்துகொண்டிருந்தனர். அப்போது அந்தப் பிரச்சினையுடன் பின்னின்று உழைத்த ஹாமர்ஷீல்ட் இந்த அளவுக்குப் பேசப்படவில்லை. இப்போதும் லுமும்பா, கடாங்கா, காங்கோ, ஷோம்பே என்ற பெயர்கள் சர்வ சாதாரணமாகத் தினந்தோறும் பேசப்படும் அளவுக்கு, ஹாமர்ஷீல்டைப் பற்றியும் அவர் இறப்பதற்கு முன் ஒரு சில வாரங்களாக ஐ. நா.வின் பழைய தீர்மானத்தை, குழப்பமுற்றிருக்கும் காங்கோவில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளையும் இன்னல்களையும்பற்றி எத்தனை பேர் உணர்ந்து விவாதித்திருக்கக்கூடும்?

கிழக்காகவும் மேற்காகவும், மூன்றாவதாக நடுநிலைமையாகவும் பிளவுபட்டுப்பிரிந்துநிற்கும் உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான ஐ. நா. வின் செயலாளர் பதவி என்பது உண்மையிலேயே கடுந்தேர்வுதான். இத்தேர்வில் ஒரு பகுதியினரிடமிருந்து நல்லெண்ணம் பெற்றால், அதேபோது மற்றொரு பகுதியினர் கசப்புத் தெரிவிக்கின்றனர். சென்ற ஒருசில ஆண்டுகளாக, குறிப்பாகக் காங்கோ குழப்பத்திலிருந்து அவர் பெற்ற வெறுப்புகள் அவர்மீது பரிமாறப்பட்ட பேச்சுவார்த்தைகள் இப்போது நினைவு கூர்ந்தாலும், அவரைப்பற்றிய பரிதாப உணர்ச்சி நம்மையும் மீறி வெளிப்படுகிறது. சென்ற ஐ, நா. பேரவைக் கூட்டத்தில் தனிப்பட்ட முறையிலும், பதவி முறையிலும் இரஷ்யா அவர்மீது சுமத்திய மிகப்பலத்த குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளிக்கும்படி தெரிவித்த கோரிக்கைகளுக்கும் "பதவியிலிருந்து விலகுவது சுலபம்; ஆனால் அதில் இருந்து செயலாற்றுவது தான் கடினம்" என்ற பொருள்பட மிக அமைதியான முறையில் அவர் பதிலிறுத்தது அனைவரையும் கவர்ந்தது.

காங்கோ குழப்பத்தின் உச்சகட்டமான லுமும்பாகொலையுண்டபோது, இரஷ்யா முழு மூச்சாக ஹாமர்ஷீல்ட் பெல்ஜிய, மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் விருப்பப்படி காங்கோ கொள்கையைக் கையாள்கிறார் என்ற குற்றச்சாட்டை மிக வெளிப்படையாகக் கூறித் தூக்கியது. ஆனால் தற்போது ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்காகக் கடாங்கோவில் ஆயுத உபயோகத்தை மேற்கொண்டு காங்கோவின் ஒருமைப்பாட்டையும், அமைதியையும் நிறுவப் பாடுபட்ட அவரை மேற்கத்தி நாடுகளான பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய நாடுகள் தவறெண்ணத்தோடு நோக்கின.

'ஒருதலைப்பட்சம்' என்ற குற்றச்சாட்டைச் சுமந்துகொண்டு தர்மசங்கட நிலைமையின் உச்சியில், தாக்குதல்களின் எல்லையில் நின்றுகொண்டு சர்வதேசத் தொண்டாற்றிய ஹாமர்ஷீல்ட்உண்மையிலேயே, இனியாவது எல்லோரது ஒருமித்த அனுதாபத்தையும் பெறவேண்டியவர்தான்.

தெருக்களில் திருட்டு என்றால், போலீஸ் துப்பறிந்து உதவி புரியும். மக்களுக்குள் வழக்குகள் தகராறுகள் என்றால், நீதிமன்றங்கள் தீர்த்து வைக்கும். போரினிலே பலத்த சேதம், உயிர்களுக்கு ஆபத்து என்றால் செஞ்சிலுவைச் சங்கம் கைம்மாறு கருதாத கடமையைச் செய்ய முன் வரும். ஆனால், போலீஸ் நிலையத்திலேயே திருட்டு என்றால்? நீதிமன்றங்களிலேயே வழக்குகள் தகராறுகள் என்றால்? போர்க்களத்துக்கே வரக்கூடாது, அப்படி வருவது அதற்கே ஆபத்து என்ற நிலை செஞ்சிலுவை ஸ்தாபனத்திற்கு வந்து விட்டால்? இந்த நிலைதான் இன்று ஐ. நா.வுக்கும் அதில் பணி புரிபவருக்கும்.

ஐ.நா. தளவாடங்களையும் ஆயுதப் படைகளையும் இராக்கெட்டுகளையும் அணுகுண்டுகளையும் நம்பி ஆரம்பிக்கப்பட்ட ஒரு அமைப்பல்ல. அதற்கிருக்கும் ஒரே உயரிய சக்திஅதற்கு வேண்டுவதாகக்கருதப்படும் தார்மீக சக்தியே. எல்லா நாடுகளின் ஒத்துழைப்பையும் துணையையும் பொறுத்துத்தான் அது செயல்படுவது. அயல்நாட்டுக் கடனையே நம்பி வாழும் நாடாயினும், அணுகுண்டுகளைப் பெற்ற நாடாயினும் ஐ. நா.வின் தார்மீக சக்தியைக் கட்டிக்காத்து வருவதுதான் உலக அமைதியை உண்டாக்கும் பல வழிகளுள் முக்கிய வழி. ஆனால் ஐ. நா. வந்தடைந்துள்ள நிலை வேறு. ஐக்கிய நாடுகள் சபை என்பது ஏதோ ஒரு கண்டத்தில் இருக்கும் ஒரு ஏகாதிபத்திய நாடு போலவும், அதன் தலைவர் ஹாமர்ஷீல்ட் ஒரு பேராசை பிடித்த மன்னர்போலவும் உள்ள நிலைமை இன்றுவரை வளர்ந்து வந்திருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவின் டாக்டர் வெர்வோர்ட் நிறவெறிக்கொள்கை சம்பந்தமாகத்தென் ஆப்பிரிக்காவுக்கு ஐ. நா.வின் பார்வையாளர் குழு வரக்கூடாது என மறுப்புத்தெரிவித்தது. டுனிஷிய பிரச்சினையின் போது டிசர்ட்டாவில் ஹாமர்ஷீல்ட் கார் மறிக்கப்பட்டுச் சோதனைக்குள்ளானது; எல்லாவற்றுக்கும் மேலாக அவர் காங்கோ—கடாங்கா போர் நிறுத்தப் பேச்சு சம்பந்தமாக விமானத்தில் சென்றுகொண்டிருந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டார் என்ற செய்தி நாளுக்கு நாள் வலுத்து வருவது ஆகிய இவையெல்லாம் ஐ. நா.வின் தோற்றத்தைக் கேலி செய்து துச்சமென மதிக்கும் மனப்பான்மை நாளுக்கு நாள் வளர்ந்து வருவதைத்தான் காட்டுகிறது.

ஹாமர்ஷீல்ட் மறைவுக்குப்பின் நிகழும் இந்த ஐ. நா. பேரவைக் கூட்டத்தின் அனுதாப நிகழ்ச்சியில், ஒரு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதைப்போல ஹாமர்ஷீல்டின் மறைவு ஒரு சாதாரண விபத்தாயிருந்தால், அது ஒரு துன்பியல் எனக் கொள்வோம். ஆனால், அது ஒரு சூழ்ச்சியாயிருந்தால் ஒரு நடக்கக்கூடாத சர்வதேச அரசியல் குற்றமே. பின்னர் குறிப்பிட்ட நிலை வளர்ந்து வருமானால் சர்வ தேச அரங்கில் துணிந்து வந்து அரசியல் தொண்டாற்ற முடியாது என்ற கீழ்த்தரமான பாதுகாப்பற்ற தன்மைதான் நாளும் வளர்ந்து வரும். அரசியல் உலகத்திலிருந்து முதலில் நீக்கப்பட வேண்டிய அபாயகரமானவை இது. அரசியல் தந்திரம் என்ற போர்வையில் இதுபோன்ற விரும்பத்தகாத—வருந்தத்தக்க செயல்கள் நிகழ்வது அரசியல் உலகம் போகக்கூடாத பாதையில் எடுத்தடிவைக்க முயல்கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

★

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

படை வரிசையில் முரசொலித்து முன்னணியில் நின்றான். யார்? திருவாளர் புன்னைவனம் பிள்ளையின், வாழைமரத்துக் குலையைப்போன்றிருந்த ஒரேயொரு மகன், மணிமாறன்.

கேட்டார்; கண்டார் புன்னைவனம். கொண்டார்கோலம். தூண்டுகோலானர் பத்மநாபர். "காரியம் மிஞ்சிவிட்டது. பெற்றெடுத்து வளர்த்தமகனே பெற்றவனுக்கு எதிரியா? இனியும் நாம் சும்மாயிருந்தால் நம்மை மதிப்பாரில்லை; ஏறெடுத்துப் பார்ப்பாரில்லை, இவ்வளவிற்கும் காரணம் அறிவானந்தர்" என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மணிமாறன், கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வெளியூருக்குச்சென்றுவிட்டிருந்தான். இதுவே தக்க தருணமென்று தடியர்கள் நால்வர் அழைக்கப்பட்டனர்.

எரிந்தது! மாபெரும் அறிவுக்கூடம் எரிந்தது!! சாக்ரடீசை விட்டார்களா; அறிவுக் கருத்துக்களை அவனிக்கு எடுத்துக்கூறிய செர்வெட்டசைவிட்டார்களா? அறிவானந்தரின் — கருத்துப்பெட்டகம் அடங்கிய அந்தக் குடிசை கருகிக் கொண்டிருந்தது.

பொழுது விடிந்தது. பொல்லாத காட்சியினைக் காணச் சகியாதவைகள்போல், பறவைகள் சத்தமிட்டுப் பறந்துகொண்டிருந்தன. ஊரின் ஒதுக்குப்புறத்தில் அவ்வுத்தமர் வாழ்ந்த அகம்—அன்பகம் இருந்த இடத்திலே சாம்பல்மேடு காட்சியளித்தது. செய்திகேட்டு ஊர்திரண்டது. நெஞ்சுடையோரெல்லாம் அலறித் துடித்தனர்! கனிவுள்ளோர் கண்ணுடையோரெல்லாம் கலங்கித் துடித்தனர்! "யார் செய்த சதி" யெனக் குமுறினர்! காவலர்கள் வந்து ஒரு வழியாய்க் கூட்டத்தை ஒதுக்கிவிட்டுச் சோதனைகளில் ஈடுபட்டார்கள்.

அங்கே சோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இங்கே சாதனையொன்றைச்செய்துவிட்டவர் போல், வேதனையற்றவராய் — பசி தீர்த்த வேங்கையாய், ஈவு இரக்கம் ஏதுமறியாதவரைப் போல் அமர்ந்திருந்தார் புன்னைவனம். ஆள் ஒருவன் அலறியபடி வந்தான் ஓடோடி. அவன் கூறிய செய்தி இது: "சொற்பொழிவாற்ற வெளியூருக்குச் சென்றிருந்த மணிமாறன் கூட்டத்தை முடித்துக்கொண்டு முகாமிடம் திரும்புகையில் குண்டர்கள் சிலரால் தாக்கப்பட்டார்."

செய்திகேட்ட புன்னைவனம் மூர்ச்சையானார். தெளிந்தார். துவண்டார்; துடித்தார்; தலையிலடித்துக்கொண்டு கதறினார். எந்தவொரு கொள்கையைக்கொண்டிருந்த காரணத்திற்காக எதிரியென்று எண்ணி அறிவானந்த மன்றத்தை அழித்தாரோ, அதே கொள்கையைக் கொண்டிருந்த தன் மகனையும் சில குண்டர்கள் கூடித் தாக்கிவிட்டனர் என்பதை எண்ணும்போதே, யாரோ தலைமீது சம்மட்டிகொண்டு தாக்குவதுபோலிருந்தது அவருக்கு. எவருடைய ஆறுதல் மொழியும் அவரைத் தேற்ற முடியவில்லை. அவரது நெஞ்சமே எதிரியாகிக் குத்திக் குடைந்துகொண்டிருக்கிறபோது, யார் தேற்றி என்ன பயன்? ஏன் தேற்றவேண்டும்?

அறிவானந்தர் மக்களின் மனதைவிட்டு மறையாத மங்காத மணிவிளக்காய் — அறிவுச்சுடராய் வாழ்கிறார்!

அதோ...அழுவதும், திடீரென்று சிரிப்பதும், மீண்டும் கதறுவதுமாகப் பையன்கள் பின்தொடரச் சென்றுகொண்டிருக்கிறதே ஒரு உருவம்; பைத்தியம்பிடித்துவிட்டு. அது வேறு யாருமல்ல; புன்னைவனம் பிள்ளையேதான்!

மணிமாறன் நலம் பெற்று, அறிவானந்தருக்கு உறுதுணையாக இருந்து, தன் தந்தையின் தகாத போக்கை மாற்றித் திருத்த அரும்பாடுபட்டிருக்கிறான்.

★

# நம்பிக்கெட்டவன்!

—[கனகு]—

பொழுது இன்னும் நன்ருக விடிய வில்லே. தெருவில் நாலேந்து பேர் கும்பலாக நடந்து செல்லும் காலடியோசைகேட்டது. அப்போது தான் விழித்தெழுந்த நான் வெளி யில் வந்தேன். சென்றுகொண் டிருந்த அந்தக் கும்பலே வியப்போடு நோக்கத் தொடங்கினேன்.

அந்தக் கும்பல் நேரே தெருக் கோடிக்குப் போயிற்று. அங்கே முத்தன் வீட்டருகில் நின்றது. அந்த வீடு சிறியதொரு ஓட்டு வீடு. முத்தனின் பூர்வீகச் சொத்து.

கும்பலில் எல்லாரும் கதவை வெறித்து நோக்கிக்கொண்டிருந்த னர். "இன்னும் எழுந்திருக்கவில்லே" என்று அவர்களில் ஒருவன் பேச் சைத் துவங்கினன். "கதவைப் போய்த் தட்டுங்கள் அமீன!" என் ருன் அவனேத்தொடர்ந்து மற்ருெரு வன். அந்த மற்ருெருவன் பக்கத்து ஊர் வேலாயுதம்.

சட்டென்று அந்த அமீன எனப் பட்டவன் கக்கத்தில் சுருட்டி, இடுக்கிவைத்துக்கொண்டிருந்த டவாலியை எடுத்து ஒருதரம் உதறி விட்டு அணிந்துகொண்டான். ஒரு முறை வேலாயுதத்தை ஏறிட்டு நோக்கினன். பிறகு கதவருகிற் சென்ருன். கதவைத் தட்டினன்.

அமீன கதவைத் தட்டுவதற்கும் உள்ளேயிருந்து கதவு திறக்கப்படு வதற்கும் சரியாக இருந்தது.

"யார் கதவைத்......" உள்ளே யிருந்து வினவிக்கொண்டு வந்த முத்தன் கேள்வியை முடிக்கவில்லே. வெளியே தலே நீட்டியதும் நெடுமர மாகிவிட்டான். அவன் தன் கண் களே இரண்டு, மூன்று தடவை துடைத்துவிட்டுக்கொண்டான். அங்கே வெளியில் நின்ருேர் வரவை அந்த வேளேயில்அவன் எதிர்பார்க்க வில்லே. திகைப்பா, அதிர்ச்சியா, மயக்கமா-என்னவென்று தெரியாத தொரு தடுமாற்றத்தில் அவன் நிலே குலேந்தான்.

சற்று நேரத்தில் உள்ளேயிருந்து முத்தனின்மனேவிவந்தாள். அவளேத் தொடர்ந்து அந்தக் குடும்பத்தின் மாணிக்கங்கள் இரண்டு — ஒன்று நாலு வயதிலும், ஒன்று ஆறு வய திலும்—வெளியே வந்து முத்தனின் இரண்டு கரங்களேயும் பற்றிக் கொண்டு நின்றன.

எதிரே நின்றவர்கள் ஏனே மௌ னம் சாதித்தனர். அந்தச் சின்னக் கும்பல்கள் இரண்டுக்குமிடையே நின்ற அமீன இப்படியும், அப்படி யும் பார்த்துக்கொண்டு பேசாம லிருந்தான்.

சிறிதுநேரத்தில் அந்தத் தெருவே அங்கு கூடியது. செலவு இல்லாமல் பார்ப்பதற்கு வாய்த்துவிட்ட, நாசகா ரர்களின் வேடிக்கையாட்டங்கள் நிரம்பிய, அந்த விபரீதக் கூத்தைச் சுவைத்துச் சுவைத்துக் காண்ப தற்கு ஊர் முழுதும் அங்கே சூழ்ந்து வந்து நின்றுகொண்டது.

"அமீன, என்ன பேசாம நிக் கிறே!" வேலாயுதம் திரும்பவும் மௌனத்தைக் கலேத்தான்.

"வேலாயுதத்திற்கு நீ கொடுக்க வேண்டிய ரூபாய் இருநூறையும் உரிய காலத்தில் நீ திருப்பிக் கொடுக் காததால், — அதாவது நீ திருப்பிக் கொடுக்கவேண்டிய கெடு கடந்து விட்டதால்—நீ ஏற்கனவே எழுதிக் கொடுத்துள்ளபடி உன் வீடு இன்று ஜப்தி செய்யப்படுகிறது," என்று அமீன கையிலிருந்த காகிதத்தை விரித்துக் காட்டிக்கொண்டு கூறி னன்.

வேலாயுதம் கூட்டிவந்த ஆட்கள் நுழைந்தார்கள் முத்தன் வீட்டுக் குள். தொடங்கியது ஆட்டத்தின் உச்ச கட்டம், உள்ளே கிடந்த சட்டி பானேகள், கந்தல் துணிகள், உடைந்த பெட்டிகள், ஓட்டைக் கூடைகள் என்ற இப்படிப்பட்டன வெல்லாம் வெளியே திக்குக்கொன் ருகத் தூக்கியெறியப்பட்டன.

முத்தன் வேலாயுதத்தை ஏறிட்டு நோக்கினன். அவனுடைய பனித்த பார்வையில் வேலாயுதம் மங்க லாகத்தான் தென்பட்டிருப்பான். ஆனல், அந்தப் பார்வையில் எத் துணே வேண்டுகோள்கள்; எத் துணே இறைஞ்சல்கள்!

வேலாயுதம் நேருக்கு நேர் முத் தனே உறுத்து நோக்கினன். அந்தப் பார்வையிலும் தெளிவு இல்லே. அங்கே அழுக்காறு என்னும் வெறிப் படலம் மறைத்து நின்றது. அது முத்தனேயும், அவன் குடும்பத்தை யும் இருளாக்கிக் காட்டிற்று. அந்த இருள் நோக்கில்தான் எத்துணே மேட்டிமை! எத்துணேச் செருக்கு!

மீசைமீது கைபோட்டபடி இறு மாப்புடன் உத்தரவு போட்டுக் கொண்டிருந்தான் வேலாயுதம். "முத்தா, நான் நேற்றே சொன் னேனே, என் பேச்சுப்படி நீ நடந் திருந்தால் இவ்வளவு தூரம் அலேக் கழிவுக்கு நீ ஆளாகியிருப்பாயா?—பார்த்தாயா என் வல்லமையை! பார், பார்! இனியாவது தெரிந்து கொள்! என்னே எதிர்த்தவன் எவ னும் அழிந்து சிதைந்து போகாமல் இருக்கமுடியாது என்பதை இனி யாவது உணர்ந்துகொள்!" என்று முத்தனின் முகத்திலும், நெஞ்சிலும், வயிற்றிலும் அறைந்து, அறைந்து சொல்வதுபோல் அமைந்தன அவ னுடைய ஒவ்வொரு வார்த்தையும், செயலும்.

முத்தன் ஒரு ஏழைக் குடியான வன். சொத்தென்று அவனுக்கிருப் பதெல்லாம் அவன் வாழும் அந்த ஒரே ஒரு வீடுதான். வாரத்திற்கும், குத்தகைக்குமாகப் பிறர் நிலத்தில் பாடுபட்டு அவன் வாழ்க்கையைத் தள்ளிக்கொண்டு வந்தான்.

இரண்டாண்டுகளுக்கு முன்னே மழையின்மையால் பெரும் வறட்சி யேற்பட்டது. முத்தன் பாடுபட்டு வளர்த்திருந்த பயிர் எல்லாம் கரு கிப் போய்விட்டன. குத்தகைப் பணம் கொடுப்பதற்கே வழியில்லே. அடுத்த ஆண்டு முழுதும் அவன் குடும்பமே பட்டினியாகக் கிடக்க வேண்டிய நிலே.

இந்தச் சந்தர்ப்பத்தில் வேலாயுதத் திடம் முத்தன் சென்றது என்னவோ உண்மைதான்-பலர்க்கு வட்டிக்குக் கடன் கொடுப்பவன் வேலாயுதம் என்ற முறையில்.

பிறர்படும் துன்பத்தை முதலாக வைத்து வாழ்க்கையில் வளமும், கொழுமையும், உயர்வும் காண்போர் பட்டியலில் முதலிடம் பெற்றவன் வேலாயுதம்.

முத்தன் வேலாயுதத்தை நாடிச் சென்றவுடனே, பளிச்சென்று ஒரு யோசனே வேலாயுதத்தின் மூளேயில் முளேவிட்டது. அவன் கேட்டான்:

"இவ்வளவு நாளா நீ என்ன பயிர் செய்து வந்தே?"

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

"நிலத்துக்குஏத்த பயிர்தானுங்க"

"அது என்னப்பா நிலத்துக்கு ஏத்தபயிரு? கரும்பு நடுவதுதானே?"

"கரும்புப் பயிரு வீட்டிலே கஞ்சிக்கு ஆகாதுங்களே!"

"அட, பணத்தைக் குடுத்தா கஞ்சிக்குத்தானே கெடைக்காதா என்ன?"

"என்னமோ பார்க்கலாமுங்க!"

அந்த 'என்னமோ பார்க்கலாம்' ஒன்றே போதும் முத்தனை மடக்குவதற்கு.

முத்தன் ஐம்பது ரூபாய் கடன் கேட்டான்.

வேலாயுதத்திற்குத் தெரியாதா அவன் வீடு ஐந்நூறு ரூபாய் பெறுமென்று. நூற்றைம்பது ரூபாய்க்கு எழுதி வாங்கிக்கொண்டு, ஐம்பது ரூபாயை முத்தனிடம் கொடுத்தான் வேலாயுதம். வாங்கிக்கொண்டான் முத்தன். வேலாயுதத்தை மனமார வாழ்த்திவிட்டும் வந்தான் அவன்.

அடுத்த ஆண்டு இரண்டு ஏக்கர் நிலம் — வழக்கமான இடத்தில் இல்லாமல்—வேறொரிடத்தில் முத்தனிடம் குத்தகைக்கு ஒப்படைக்கப் பட்டது. அது வேலாயுதத்தின் ஏற்பாடு. முத்தன் ஒத்துக்கொள்ளாமல் என்ன செய்வான்! ஐம்பது ரூபாய் கடன் கொடுத்தவனாயிற்றே வேலாயுதம்! — அவன் பேச்சைக் கேட்காமலிருக்க முடியுமா?

வந்தது அறுவடை. வந்தான் வேலாயுதம்.

"முத்தா கரும்பெல்லாம் வெல்லம் காய்ச்சத்தானே போறே?"

"ஆமாங்க. நெலத்துக்காரரு அப்படித்தானுங்க சொன்னாரு"

"நீ குத்தகையைப் பணமா குடுக்கப் போறியா? வெல்லமாக் குடுக்கப் போறியா?"

"வெல்லமாத்தானுங்க!"

"அட விவரமில்லாதவனே, பணமா குடுத்துடலாமினு நெலத்துக்காரன் கிட்டே சொல்லு—இன்றைய நிலவரப்படி!"

"அது எப்படிங்க! அன்னிக்குப் பேசினது வெல்லந்தானே!"

"பேசினதாவது, ஒண்ணுவது! நிலத்தையே நான்தானே கைகாட்டி விட்டேன்!"

"கைகாட்டிவிட்டது சரிங்க. ஒப்பந்தம் நான்தானே பண்ணிக்கிட்டேன்!"

"அட சட்! மனுசனைப்பாரு, மனுசனை! நீயெல்லாம் நன்றிகெட்டவனடா! — பேசாமே நான் சொல்ற மாதிரி செய்! அன்னிக்குப் பேசினது அப்படி. ஆனா இன்னிக்குவெல்லம் தரமுடியாது. பணம்தான் தருவேன் —இன்றைய நிலவரப்படி என்று அடித்துப் பேசு. அவன் என்ன செய்துபுடுவான்? எல்லாத்துக்கும் நான் இருக்கிறேன். நீ பயப்படாமே சொல்லு அப்படி! வெல்லத்தையெல்லாம் என்கிட்டேயே குடுத்து மொத்தத்திலே, முன்பணம் வேணுமானா இப்பவே வாங்கிக்க!"

"அது தகாதுங்க! வாக்குத் தவறுவது ரொம்ப மோசமுங்க!"

"அப்போ......"

"வெல்லந்தான் குடுக்கப்போறேனுங்க!"

"அட முத்தா, என்னை நீ யாருன்னு தெரிஞ்சிக்கலே! தெரிஞ்சிக்குவேடா — இன்னும் ரெண்டே நாளிலே!"

வேலாயுதம் கறுவிக்கொண்டு போனான். முத்தனுக்கு அப்போதே கிலிபிடித்துவிட்டது. என்றாலும் மனச்சான்றுக்கு எதிராக எதையும் செய்ய அவனிடம் துணிவு இல்லை. நடப்பதை நடக்கும்படி விட்டுவிட்டு அவன் வாளாஇருந்தான்.

இரண்டே நாள் என்ற வேலாயுதம் மறுநாள் அதிகாலையிலேயே வந்து விட்டான். முத்தன் வாங்கிய ஐம்பது ரூபாய் 15% வட்டியும், செலவுமாக ரூ. 20% தாண்டிவந்து நின்றது. அதோ முத்தனின் பூர்வீகச் சொத்தை அது பறித்துக்கொண்டு போகிறது.

முத்தன் நடுநடுங்கிக்கொண்டு, செய்வதறியாது தவித்துக்கொண்டு நிற்கிறான் நடுத்தெருவில். அவனுடைய மாணிக்கங்கள் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நிற்கின்றன இருபாங்கிலும். அவன் துணைவி தேம்பிக்கொண்டு, விசும்பிக்கொண்டு கிடக்கிறாள் அதோ ஒரு மூலையில்.

இழுத்து மூடிப் பூட்டிவிட்டான் வேலாயுதம் முத்தனின் வீட்டை. இனி அந்த வீடு வேலாயுதத்தின் சொத்து. இனி முத்தனுக்கு, அவன் மனைவி மக்களுக்கு நிற்க நிழல் கிடையாது. ஆட்டம் முடிந்தது. அங்கே கூடி நின்ற ஊர்க் கூட்டமும் கலைந்தது. ✻

தலைமைக் கழக அறிக்கை எண் 20/61

# மதுரை நகர கழகப் பணி

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர், 'நம் நாடு' இதழில் 26---4---61-ல் வெளியிட்டுள்ள அறிக்கைப்படி மதுரை நகர தி. மு. கழகச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும்வரையில், மதுரை நகர தி. மு. கழகப் பணியினை (பொதுக் கூட்டங்கள் -- சிறப்புக் கூட்டங்கள் -- ஊர்வலங்கள் -- அறிக்கை வெளியிடுதல்--பணவசூல்--உட்கிளைகள், சார்புமன்றங்கள் ஆகியவைகளுக்கு அவ்வப்போது ஆலோசனை கூறி நடத்திவருதல் ஆகியவைகள்) மதுரை வட்டச் செயலாளர் பொறுப்பில் அமைந்துள்ள தனிக் குழுவே மேற்கொண்டு நடத்திவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஏற்பாட்டின்படி நடக்கும் கழகப் பணிகளுக்கு, கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்புதந்து சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறன்.

'அறிவகம்' சென்னை-13.
26---9---61

**என். வி. நடராசன்,**
அமைப்புச் செயலாளர்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.